# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2499 - 2026 ජූලි මස 24 වැනි සිකුරාදා - 2026.07.24

2499 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 4 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 82810 (2026/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தில்) பதவியின் பொருட்டு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026 – கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பகாரர்கள் மத்தியில், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சைக்குழுவினால்தகைமைகளைமதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, உச்சப் புள்ளிகளை பெற்றுக் கொள்கின்ற விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் செயன்முறைக்கு அமைய தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. **தேவையான தகைமைகள் :**

i. **கல்வி/ மற்றும் தொழிற் தகைமைகள்** :

இலங்கையில் உச்ச நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்

ii. **அனுபவம் :**

உச்சநீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் சட்டத்தரணியாக 3 வருடங்களுக்குக் குறையாத தொழில் ரீதியான அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (செயல்பாட்டிலுள்ள தொழில்முறை அனுபவத்தை நிரூபிக்கும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில் அனுபவத்தை பெற்ற காலம், சான்றுபடுத்துபவரின் உத்தியோகபூர்வ இலட்சணை மற்றும் சான்றுபடுத்திய திகதி என்பன தெளிவாக குறிப்பிட்டு இருக்க வேண்டும்)

அல்லது

உச்சநீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனம் ஒன்றில் சட்டத்துறை பதவி ஒன்றில் 3 வருடங்களுக்கு குறையாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளில் உரிய அனுபவத்தை பெற்றிருத்தல்

(செயலாளர்/ திணைக்களம்/ நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட கடிதம் வாயிலாக அதனை உறுதிப்படுத்தி இருக்க வேண்டும்.)

- வழக்குகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புச் செய்தல் நடவடிக்கைகள்.
- உடன்படிக்கைகள் மற்றும் தொடர்பான நாளாந்த நடவடிக்கைகள்.
- உரிய சட்ட ஒழுங்குமுறை தொடர்பான நாளாந்த நடவடிக்கைகள்.
- சட்டவரைவுகள் மற்றும் சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்டரீதியான ஆவணங்கள் தொடர்பான நடவடிக்கைகள்.
- வெள்வேறு சட்டபூர்வ நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற சட்டம் அல்லது நீதித்துறை செயற்பாடுகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.

**குறிப்பு:** ஆரம்ப தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களில் விண்ணப்பகாரரினாலேயே சான்றுபடுத்திய நிழற்பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பிக்கின்ற மற்றும் நிறைவடைகின்ற திகதிகள் தெளpவாக குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இணைக்கப்படாது அனுப்பி வைக்கும் விண்ணப்பங்கள் அறியத் தராமலேயே நிராகரிப்புச் செய்ய முடியும்.

*சட்டரீதியான பதவி என்பது சட்டத்துறையில் பட்டப் படிப்பு அல்லது உச்சநீதிமன் றத்தில் சட்டத்தரனியாக சத்தியப் பிரமாணம் செய்திருப்பது ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஆரம்பத் தகைமையாக உள்ள பதவியாகும்.

iii. **உடற்தகைமை :**

சகல விண்ணப்பகாரரும் இலங்கையின் எப்பிரதே சத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவி யில் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்று வதற்கும் போதியளவு உடல் மற்றும் உள தகுதி யுடையவராக இருத்தல் வேண்டும். உடல் ஆரோக்கிய நிலையை மருத்துவ பரிசோதனை அறிக்கையின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

iv. ஏனைய தகைமைகள்

- இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பக்காரர் சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (அது தொடர்பாக விண்ணப்பக்காரர் வதிவிடப் பிரதேச கிராம உத்தியோகத்தரினால் ஆறு மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட DS 04 சான்றிதழ் மற்றும் பிறிதொரு நற்சான்றி தழுடனும் உறுதிப்படுத்த வேண்டும்).
- விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தன்று பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

i. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. நீர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். தாங்கள் காலத்துக்கு காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

ii. இந்த நியமனம் 03 வருடகால தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடத்திற்குள் ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய, உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

iv. அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், நிதிப் பிரமாணத்திற்கும் மற்றும்ீ அரசாங்கத்தின் ஏனைய விதிகளுக்கும், சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளுக்கும் மற்றும் அவற்றிற்கு உரியவாறு அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் நீர் உட்படுகின்றீர்.

v. விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமை கொள்ளும் மொழி மூலமானது நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடுகின்ற மொழி மூலமாகும்.

04. **வயது எல்லை :**

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதினை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்).

05. **சம்பளத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் உப அட்டவைணை II இற்கு அமைய இந்த பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 82,150.00– 10 x 2,400 – 8 x 2,940 – 17 x 3,900 - ரூ. 195,970 (SL-1-2025) ஆகும். உமக்கு சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் உப அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமையவாகும்.

06. தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கள் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | அ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது உள்நாட்டு பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது இலங்கை பாராளுமன்ற சட்டத்தினால் ஸ்தாபிக்கப்படுகின்ற பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டம் | 25 | |
| | ஆ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது உள்நாட்டு பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது இலங்கை பாராளுமன்ற சட்டத்தினால் ஸ்தாபிக்கப்படுகின்ற பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக்கல்லூரியில் உயர் சட்டக் கல்லூரி நிறுவனத்தினால் பெற்றுக் கொண்டுள்ள சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா | 20 | |
| | இ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது உள்நாட்டு பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது இலங்கை பாராளுமன்ற சட்டத்தினால் ஸ்தாபிக்கப்படுகின்ற பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட, | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடன் சட்டவியல் பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு சித்தியுடன் சட்டவியல் பட்டம் | 10 | |
| | • வகுப்பு சித்தியுடன் சட்டவியல் பட்டம் | 07 | |
| | • சாதாரண சித்தியுடன் சட்டவியல் பட்டம் | 05 | |
| | ஈ) சட்டக்கல்லூரியில் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பில் சித்தியடைதல் | 10 | |
| | சட்டக்கல்லூரியில் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பில் சித்தியடைதல் | 05 | |
| | குறிப்பு I : சட்டக்கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் கௌரவ சித்தியுடன் சித்தியடைந்து இருந்தால் மாத்திரம் மேலே சொல்லப்பட்ட 05 புள்ளிகளை வழங்கலாம். | | |
| | குறிப்பு II: உச்ச தகைமையின் பொருட்டு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 02 | **மேலதிக அனுபவம் :**<br>வழக்குகளுக்கு உரிய ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் திறந்த சட்டமன்றத்திற்கு விடயங்களை முன்வைத்தல். | | 35 |

| | *வழக்குகளை கோவைப்படுத்தல் (ஒரு வழக்கின் பொருட்டு)* | *நீதிமன்றத்தில் முன்நின்று விடயங்களை முன்வைத்தலுக்கான புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு)* |
|---|---|---|
| உச்ச நீதிமன்றம் | 2 | 5 |
| மேல்முறையீட்டு நீதிமன்றம் | 2 | 4 |
| உயர்நீதிமன்றம் | 2 | 3 |
| மாவட்ட நீதிமன்றம் | 2 | 5 |
| தீர்ப்பாயங்கள் | 2 | 3 |

குறிப்பு – மேற்போந்த தகைமைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிய வழக்கு தீர்ப்புகளின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு இடம்பெற்ற திகதியின் வழக்கு அறிக்கையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03 | <u>தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு</u> | | 10 |
| | அ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமொன்று தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்தினை அல்லது கணனி விஞ்ஞானத்தை பிரதான பாடமொன்றாக கற்றிருப்பது தொடர்பாக | 10 | |
| | ஆ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியினால் அல்லது ஏனைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் கல்வி நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான டிப்ளோமா | 08 | |
| | இ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது அதற்கும் மேல் தகைமையைக் கொண்டுள்ள அல்லது ஏனைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் கல்வி நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில் நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு மேல் மட்டத்தில் டிப்ளோமா | 05 | |
| | ஈ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியினால் அல்லது ஏனைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான பாடநெறியை பயிற்சி வேலைத்திட்டத்தை பங்குபற்றி பெற்றுக் கொண்டுள்ள சான்றிதழ். (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் என்றவீதத்தில் உச்சமாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்குதல்<br>குறிப்பு : உச்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் | 04 | |

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 04 | **மொழித் தேர்ச்சி**<br>அ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கிலத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்ற பட்டம் | 15 | 15 |
| | ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் மாதிரி நீதிமன்ற போட்டிகளில் (Moot Court competition) காட்டி உள்ள ஆங்கில மொழி வெளிப்படை<br>தனி<br>i. முதலாம் இடம் /சிறந்த திறமை - 12<br>ii. இரண்டாம் இடம் - 10<br>iii. மூன்றாம் இடம் / வேறு திறமைகள் - 08<br><br>i. முதலாம் இடம் /சிறந்த திறமை - 12<br>ii. இரண்டாம் இடம் - 10<br>iii. மூன்றாம் இடம் / வேறு திறமைகள் - 08 | 12 | |
| | இ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அங்கில மொழியில் பெற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா அல்லது ஏனைய அரசினால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து ஆங்கில மொழியில் பெற்றுக் கொள்ளப்பட்ட SLQF 3 அல்லது அதற்கு மேல் மட்டத்தில் டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனத்தினால் ஒருங்கினைந்து நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது 1500 மணி நேர பாடநெறியொன்றினை பெற்றிருத்தல் ஆங்கில மொழியில் டிப்ளோமா | 10 | |
| | ஈ) க.பொ.த.(உ/த) பரீட்சையில் அல்லது Edexcel அல்லது Cambridge உயர்தர பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிN~ட சித்தி பெற்றிருத்தல் அல்லது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி அன்று உடன் முன்பான 02 வருடங்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட் IELTS சித்திப் புள்ளி 6.5 (ஒவ்வொறு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 06 புள்ளிகளுடன்) அல்லது அதற்கு மேல், TOEFL –IBT 79 அல்லது அதற்கு மேல் TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேல்◌ அல்லது TOEFL-PBT 550 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல். | 08 | |
| | உ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழியில் பெற்றுக் கொள்ளப்பட்ட உயர் பத்திரம் அல்லது ஏனைய அரச அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட SLQF2 மட்டச் சான்றிதழ்<br><br>குறிப்பு : உச்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் | 05 | |
| 05 | நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை<br>பதவியில் நிலைப்படுத்துவதற்காக விண்ணப்பாகரர்களிடம் இருந்து<br>○ ஆற்றல் (Strength Question) - (2 புள்ளிகள்)<br>○ சரந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப தீர்மானம் எடுக்கும் இயலுமை (Situation Question) - (3 புள்ளிகள்)<br>○ திறமை (Competency question) - (10 புள்ளிகள்)<br>மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதை நோக்காகக் கொண்டு வினாக்களுக்கு பெற்றுக் கொடுக்கின்ற விடைக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும் | | 15 |
| | **மொத்தம்** | | **100** |

**குறிப்பு** : தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற சான்றிதழ்களுக்கு உரிய கால எல்லைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டு இல்லாது விடின் அத்தகைய சான்றிதழ் களுக்கு உரிய கால எல்லையை உரிய நிறுவனத்தின் ஊடாக எழுத்து மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிப்பது விண்ணப்பகாரரது பொறுப்பாகும்.

அவ்வாறு கால எல்லையை குறிப்பிடப் படாது உள்ள மற்றும் கால எல்லையை உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

இங்கு பிரதான பாடமாகக் கருதுவது பட்டத்தின் மொத்த விடய அலகு (உள்ளடங்கலாக) எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று உள்ளடக்கியதாக பாட மாகும்

07. **விண்ணப்பகாரரது ஆளடையாளம் :**

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற விண்ணப்பகாரர்கள் மாத்திரமாகும்.

நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் தாமே உரியவாறு உண்மைப் பிரதி என சான்று படுத்தப்பட்ட 2 கோவைகள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆளடையாளத்தை சான்றுபடுத்தும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

1. ஆட்பதிவுகள் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை
2. ஏற்றுக் கொள்ளத்தக்க கடவுச் சீட்டு
3. ஏற்றுக் கொள்ளத்தக்க சாரதி அனுமதிபத்திரம்

08. **விண்ணப்பங்கள் சமர்பிக்கப்படும் முறை :**

i. விண்ணப்பங்கள் 2026.08.14 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் த.பெ.இலக்கம், 13, கெட்டம்பே, பேராதனை. எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப் பட்டுள்ளன. விண்ணப்பகாரர் அவர்களது விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதலாவது பக்கத்தில் 1 முதல் 3.2 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 04 முதல் 9.4 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 10 முதல் 13 வரையிலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்டு தமது சொந்த கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

iii. விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித வுறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனும் வாசகம் தெளpவாக எழுதப்படுதல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பகாரரது கையொப் பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமான ஆணையாளர்/ சட்டத்தரனி/நொத்தாரிஸ்/முப்படைகளில் அதிகார உத்தியோகத்தர் அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேல் மாதாந்த ஒருங்கினைந்த சம்பளம் பெறுகின்ற அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்குதம் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்துதல் வேண்டும்.

v. தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது சேவை நிலைய திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

vi. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு அமைய அமையாத விண்ணப் பங்கள் நிராகிரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைபாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல் :**

உம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் போலியாக அல்லது பிழை என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் உங்களது விண்ணப்பத் தகைமை நிராகரிக்கப்படும். ஏதும் போலியாக அல்லது பிழை என ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்கு உரியவாறான செயற்பாடுகளுக்கு நீங்கள் உட்படுத்தப்பட்டு சேவையில் நின்றும் நீக்கப்படுவீர்.

10. வெற்றிடம் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடல் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கே உரியதாகுதம்.

11. இந்த வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையே ஏதேனும் பொருந்தாத் தன்மை அல்லது முரன்பாடு ஏதும் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

12. இந்த வர்த்தமானி அறிவிப்பின் விதிகளால் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது ஏதாவது பிரச்சினை நிலமை ஏற்படுமாயின் அது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு எடுக்கும் தீர்மானமே இறுதித் தீர்வாகும்.

அரசாங் சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்

செயலாளர்,
விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு.

2026, யூலை 15 ஆம் திகதி

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு உரிய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தில்) பதவியின் பொருட்டு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026**

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கின்ற மொழிக்குரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக.

சிங்களம் -2/ தமிழ் -3/ ஆங்கிலம் - 4 மொழிமூலம் [ ]

குறிப்பு – விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

01. 1.1 முழுப் பெயர் (திரு/திருமதி/செல்வி):

……………………………………………………………………………………………………………………………

(சிங்களத்தில்/தமிழில்)

1.2. முழுப் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :

…………………………………………………………………………………………………………………………..

1.3. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி) :

…………………………………………………………………………………………………………………………

(சிங்களத்தில்/தமிழில்) M.G.P.S.K. Gunawardana )

1.4. முதெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :

…………………………………………………………………………………………………………………………

02. 2.1 நிரந்தர முகவரி:

……………………………………………………………………………………………………………

(சிங்களத்தில்/தமிழில்)

2.2 நிரந்தர முகவரி:

……………………………………………………………………………………………………………

(ஆங்கில பேரெழுத்துக்களில்)

2.3 அஞ்சல் முகவரி :

……………………………………………………………………………………………………………………

ஆங்கிலத்தில்

3.0. நிரந்தர வதிவிடத்திற்கு உரிய :

3.1 உள்ளூராட்சி நிறுவனம் : ……………………

3.2 மாவட்டம் : ……………………

4.0 4.1 நீர் இலங்கை பிரசையா : .......................

4.2 இனம் (சிங்களம்/ இலங்கைத்தமிழர்/ இந்தியாத் தமிழர்/ முஸ்லீம்/ ஏனைய) : ...........................

5.0 5.1 ஆண்/பெண் : ஆண் 0 ☐

பெண் 1

5.2 விவாகமானவர்/ விவாகமாகாதவர்/ விதவை: விவாகமானவர் - 1

விவாகமாகாதவர் - 2 ☐

விதவை - 3

5.3. பிறந்த திகதி : வருடம் : ................ மாதம் : ................. திகதி : ......................

5.4. விண்ணப்பக் கோரல் இறுதித் திகதியன்று வயது : வருடம் : ........ மாதம் : ...... நாள் : .......

5.5. தே.அ.அ. இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. தொலைபேசி இலக்கம்: நிரந்தர தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

7.0. கல்வித் தகைமைகள் :

| 7.1 | பட்டம் | நிறுவனம் | திகதி |
|---|---|---|---|
| | …………………………….. | …………….. | …………….. |
| | …………………………….. | …………….. | …………….. |

8.0 உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமானம் செய்த திகதி :.......................................

8.1 உச்சநீதிமன்றத்தில் சத்தியப் பிரமானம் செய்ததன் பின்னர் 3 வருட அனுபவத்தை பூர்த்தி செய்த திகதி : …………………………..

8.2 அரச நிறுவனம் ஒன்றில் சட்ட பதவி ஒன்றில் 3 வருட அனுபவத்தை பூர்த்தி செய்த திகதி : …………………………..

* விண்ணப்பக் கோரல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகுதிகளுடன் தொடர்புடைய

பின்வரும் ஆவணங்களின் நிழற் பிரதிகளை விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

i. சட்டப் பட்டப்படிப்பு சான்றிதழின்/உச்ச நீதிமன்ற வழக்கறிஞராக் சத்தியப்பிரமானம் செய்த சான்றிதழின் நிழற் பிரதி
ii. அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகள்
iii. பிறப்புச் சான்றிதழின் நிழற் பிரதி
iv. செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தின் நிழற் பிரதி

9.0 விண்ணப்பக் கோரல் அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழ் உள்ள ஒவ்வொறு தகைமைகளையும் பெற்றுக் கொள்வதற்கான விபரம் :

9.1 மேலதிக கல்வித் தகைமைகள் : ………………………………………………………………………………
9.2 மேலதிக அனுபவம் : ………………………………………………………………………………………
9.3 தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் சட்டம் தொடர்பான அறிவு : ……………
9.4 மொழி இயலுமை : …………………………………………………………………………………………

10. நீர் எப்போதாவது ஏதாவது குற்றத்தின் காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா?
ஆம்/இல்லை : …………………………………
ஆம் எனில் விபரிக்க : ……………………………………………………………………………………

11. விண்ணப்பகாரரது உறுதியுரை

இந்த விண்ணபத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் சான்றளிக்கிறேன். இதில் உள்ள ஏதேனும் தகவல் எனது தேர்வுக்கு முன் போலியானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், நான் தகுதி நீக்கத்திற்கு ஆளாக நேரிடும் என்பதையும், நியமனத்திற்குப் பிறகு அவ்வாறு இருப்பது கண்டறியப்பட்டால், இழப்பீடு இல்லாமல் பணிநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்தாலும் நான் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்கும் தண்டனை பெறவில்லை என்பதை எனது வழக்கமான கையொப்பத்துடன் இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

.................................
விண்ணப்பக்காரரது ஒப்பம்

திகதி : ..................

12. விண்ணபகாரரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல்

இந்த விண்ணபத்தை சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி………………………………………………………… என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர்/அவள் என் முன்னிலையில் அவரது/அவளது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

............................................. ............................................................
திகதி கையொப்பத்தை சான்றுபடுத்துபவரின் ஒப்பம்
முழுப் பெயர்:
பதவி:
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தவும்)

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

13. **திணைக்களத்/ நிறுவன தலைவாநனது பரிந்துரை:**

மேற்கண்ட விண்ணப்பதாரான திரு/திருமதி/செல்வி ................................. என்பவர் இத்திணைக்களத்தில் / ……………………. மாகாண சபையில் ................................... பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் என்றும், விண்ணபத்தில் உள்ள தகவல்கள் அவரது பெயர்வழிக் கோப்பின்படி சரியானவை என்றும் நான் சான்றளிக்கிறேன். இந்த உத்தியோகத்தர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் இந்தத் திணைக்களத்தில்/மாகாண அரச சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.
(பொருத்தமற்ற சொற்களைக் வெட்டிவிடுக)

...............................................
திணைக்கள/நிறுவன தலைவர்
உத்தியோகபூர்வ இலட்சனை

திகதி : .........................

முகவரி : .....................

07-347

## இலங்கை புகையிரத திணைக்களம்

## தங்குமிட பங்களா உதவியாளர் பதவி தொடர்பில் விண்ணப்பங்களை கோரல் - 2026

1. இலங்கை புகையிரத திணைக்களத்தில் அமைந்துள்ள தங்குமிட விடுதிகள் தொடர்பில் 20 தங்குமிட பங்களா உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வ தற்காக ஏற்புடைய தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்:**

2.1 **கல்விசார் தகைமைகள்**:

கல்விப் பொதுதராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளை விஞ்சாத வண்ணம் இரு(02) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2.2 **தொழிற்சார் தகைமைகள்**:

துறைசார்ந்து பெற்றுள்ள தொழிற்சார் தகைமைகள் விசேட தகைமையாக கருதப்படும்.

2.3 **அனுபவம்**:

துறைசார்ந்து பெற்றுள்ள அனுபவம் விசேட தகைமையாக கருதப்படும்.

2.4 **உடல்சார் தகைமைகள்**:

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்க்கும் பதவியில் கடமை புரிவதற்க்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான பொருத்தப்பாட்டினை கொண்டிருத்தல் வேண்டும்.

2.5 **வயதெல்லை:**

விண்ணப்பக் கோரல் அறிவித்தலிற்கமைய விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதினை விட குறையாமலும் 45 வயதினை விஞ்சாதும் இருத்தல் வேண்டும்.

2.6 **வேறு தகைமைகள்:**

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்..

III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படுகின்ற அனைத்து தகைமைகளையும் விண்ணப்பக் கோரல் அறிவித்தலின் இறுதி திகதிக்கு முன்னதாக அனைத்து வகையிலும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

3. **பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்:**

3.1 **சம்பள குறியீட்டு இலக்கம்:**

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இல் காட்டப்பட்டுள்ளவாறு சம்பள குறியீட்டு இலக்கம் PL 1 -2025

3.2 **சம்பள அளவீடு:**

ரூ. 40,000.00 - 10 x 450 -10 x 490 - 10 x 540 - 12 x 590 - 61,880.00 (மாதாந்த) ஆகுமென்பதோடு அச் சம்பளம் உமக்கு 2027.01.01 ஆம் திகதி தொடக்கமே கிடைக்கப் பெறும். நியமனம் அமுலுக்கு வருகின்ற திகதி தொடக்கம் இச் சுற்றறிக்கையின் III ஆவது அட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய தங்களுக்கு சம்பளம் செலுத்தப்படும்.மேற்கூறிய நியமன திகதியிலிருந்து 03 வருட காலம் செல்வதற்கு முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்)

4. **சேவை நிபந்தனைகள்:**

4.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரிய தாகும். ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் இன்னகத்து மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானத்திற்கு தங்கள் கீழ்படிய வேண்டும்

4.2 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றவர்கள் நாட்டில் எப் பிரதேசத்திலும் அமைந்துள்ள புகையிரத திணைக்களத்திற்குரிய தங்குமிட பங்களாக்களில் சேவை புரிவதற்கு பொருந்தியிருக்க வேண்டும்.

4.3 தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் பதவிக்கு ஏற்புடைய ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், தாபனக் கோவை, நிதி பிரமாணங்கள்,அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவையின் விதிகளுக்கு மற்றும் புகையிரத திணைக்களத்தின் விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கு கீழ்படிய வேண்டும்.

4.4 இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் நியமன திகதியிலிருந்து மூன்று (03) வருட கால தகுதிகூர் காண் காலத்திற்கு கீழ்படிய வேண்டும்.

4.5 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் தாங்கள் நியமிப்பிற்கான தகைமைளை நிறைவு செய்துள்ள மொழி மூலத்திற்கமைய மூன்று (03) வருட காலத்திற்குள் பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இடைநேரான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய அரசகரும மொழி தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்..

5. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை :**

மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், தகைமைகளை மதிப்பிடும் நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதிக்கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் முறைக்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். தகைமைகளை மதிப்பிடும் நேர்முக பரீட்சை தொடர்பில் கீழ்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *அதி கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| தொழிற்சார் தகைமைகள் | 25 |
| பதவிக்கு ஏற்புடையவாறு பெற்றுள்ள அனுபவம் | 40 |
| வெளிவாரி திறன் செயற்பாடுகள் | 10 |
| நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டப்படும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

5.1 தகைமைகளை மதிப்பிடும் நேர்முக பரீட்சை தொடர்பில் புள்ளி வழங்கப்படும் விதம் விபரமாக கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் <u>(மொத்த புள்ளிகள் 20)</u><br>அடிப்படை கல்வி தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. (கல்விப் பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளை விஞ்சாத வண்ணம் இரு(02) திறமை சித்திகளுடன் ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | புள்ளிகள் |
| கபொ.த. சாதாரண தர பரீட்சையில் இரு(02) திறமை சித்திகளை விடவும் திறமை சித்திகளை பெற்றுள்ள ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் 02 புள்ளிகள் வீதம் அதிக்கூடியளவில் 05 பாடங்களுக்கு | 10 |
| கபொ.த. உயர் தர பரீட்சையில் சித்தியடைந்துள்ள பாடமொன்று தொடர்பில் 01 புள்ளி வீதமும் திறமை சித்திகளை பெற்றுள்ள பாடமொன்றிற்காக 02 புள்ளிகள் வீதமும் 03 பாடங்களுக்காக (ஆங்கில பாடத்தினை தவிர்த்து) | 6 |
| ஆங்கில பாடம் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/டிப்ளோமா பாடநெறி தொடர்பில் | 2 |
| வேறு மொழிகள் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/டிப்ளோமா பாடநெறி தொடர்பில் | 2 |
| <u>தொழிற்சார் தகைமைகள்(மொத்த புள்ளிகள் 25)</u><br>அங்கீகரிக்கப்பட்ட நிறவமொன்றில் உணவுளை தயாரித்தல்(Professional Cookery), ஹோட்டல், வைத்தியசலை, அலுவலகங்கள் மற்றும் வீடுகள்போன்ற இடங்களில் துப்புரவு பணி மற்றும் பராமரிப்பு (Housekeeping Services), ஹோட்டல்,உணவகங்கள், உணவுகளை வழங்குகின்ற இடங்களில் உணவுகளை வழங்குதல் மற்றும் விருந்தினரை உபசரித்தல்(Food & Beverage Associate/ Crew member) அல்லது பதவிக்கு ஏற்புடைய தறை சார்ந்து பெற்றுள்ள திறன் கருத்திற் கொள்ளப்படும்.( பெற்றுள்ள உயர்ந்த தேனும் ஒரு திறனுக்கு மாத்திமே புள்ளிகள் வழங்கப்படும்) | புள்ளிகள் |
| மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 04 அல்லது அதற்கு மேலான பாடநெறி தொடர்பில் | 25 |

| | |
|---|---|
| மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட NVQ 03 பாடநெறி தொடர்பில் | 20 |
| வேறு பாடநெறிகள் தொடர்பில் | 10 |
| பதவிக்கு ஏற்புடையவாறு பெற்றுள்ள அனுபவம்(மொத்த புள்ளிகள் 40)<br>நிறுவனம்,ஹோட்டல், தங்குமிட பங்களாக்கள்,வைத்தியசாலைகள், களஞ்சிய துறையில் துப்புரவு பணி , கூட்டுதல்,வெக்கும்செய்தல், கழுவுதல்,மொப் செய்தல், குளியலறைகளை துப்பரவு செய்தல் மற்றும் படுக்கையறைகளை துப்புரவு செய்தல் மற்றும் ஒழுங்காக வைத்தல்,தளபாடங்கள், ஏனைய கருவிகளை துப்புரவு செய்தல் மற்றும் பராமரித்தல், பொருட்களை கட்டளையிடுதல் மற்றும் குறிப்பெழுதுதல், உணவு சமைத்தல், உபசரித்தல், கழிவுகளை உரிய முறையில் அகற்றல் அல்லது பதவிக்கு ஏற்புடைய துறை சார்ந்து பெற்றுள்ள சேவை அனுபவம் கருத்திற் கொள்ளப்படும். (சேவை அனுபவம் தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற 02 சேவை சான்றிதழ்கள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும்) | புள்ளிகள் |
| சேவை அனுபவம் 04 வருடங்கள் அல்லது அதனை விடவும் அதிகம் எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 20 புள்ளிகள் வீதம் இரண்டு (02)சேவை சான்றிதழ்களுக்கு) | 40 |
| சேவை அனுபவம் 02 வருடங்கள் அல்லது அதனை விடவும் அதிக 04 வருடங்களுக்கு குறைந்தது எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 10 புள்ளிகள் வீதம் இரண்டு (02)சேவை சான்றிதழ்களுக்கு) | 20 |
| சேவை அனுபவம் 01 வருடம் அல்லது அதனை விடவும் அதிக 02 வருடங்களுக்கு குறைந்தது எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 05 புள்ளிகள் வீதம் இரண்டு (02) சேவை சான்றிதழ்களுக்கு) | 10 |
| சேவை அனுபவம் 06 மாதங்கள் அல்லது அதனை விடவும் அதிக 01 வருடத்தினை விடவும் குறைந்தது எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 2.5 புள்ளிகள் வீதம் இரண்டு (02) சேவை சான்றிதழ்களுக்கு) | 05 |
| வெளிவாரி திறன் செயல்பாடுகள்(மொத்த புள்ளிகள் 10) | புள்ளிகள் |
| விளையாட்டு/மாணவ படைவீர்கள் போன்ற திறமைகள் தொடர்பில் பெற்றுள்ள இரண்டு சான்றிதழ்களுக்கு 02 புள்ளிகள் வீதம் | 4 |
| அழகியற் துறை சார் திறமைகளுக்காக பெற்றுள்ள அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழொன்றிற்காக | 2 |
| சமூக சேவை நடவடிக்கைகள் தொடர்பிலான சான்றிதழ்கள்/ சமய வகுப்பு போட்டிப் பரீட்சை சான்றிதழொன்றுக்காக | 2 |
| மேலே புள்ளிகள் தொடர்பில் முன்வைக்கப்படாத வேறு திறமைகள் தொடர்பில் பெற்றுள்ள அங்கீகரிக்கப்படக் கூடிய சான்றிதழொன்றுக்காக | 2 |
| நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டும் திறமை(மொத்த புள்ளிகள் 5) | புள்ளிகள் |
| தொலைதொடர்பாடல் – தெளிவாக, கண்ணியமாக ,நம்பிக்கையுடன் கதைத்தல் | 2 |
| செவிமடுத்தல் – நன்றாக செவிமடுத்தல் மற்றும் புரிந்துக்கொள்ளல் | 2 |
| சிறந்த சித்தரிப்பு -பொருத்தமான உடை, அங்க அசைவு பாவனை மொழி,மற்றும் தன்மை | 1 |

மேலே புள்ளி வழங்குவதற்கு கருத்திற்கொள்ளப்படுகின்ற அனைத்து தகைமைகளும் (நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டும் திறமையை தவிர்த்து) விண்ணப்பக் கோரலின் இறுதி தினத்திற்கு நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

6.1 கீழே காட்டப்பட்டுள்'ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2026 .............................. ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் " புகையிரத பொதுமுகாமையாளர், புகையிரத தலைமையகம், த.பெ. இல. 355 ஓல்கோட் மாவத்தை,கொழும்பு 10. எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணபத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் தங்குமிட பங்களா உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2026 என குறிப்பிடப்பட வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

6.2 விண்ணபத்தில் விண்ணபதாரியின் கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபரொருவரை, சமாதான நீதவான் ஒருவரை,சத்திய பிரமாணம் செய்த ஆணையாளரொருவரை, சட்டத்தரணியொருவரை, பிரசித்த நொத்தாரிஸ் ஒருவரை முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரை, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினையுடைய உத்தியோகத்தரொருவரை, அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவி நிலை தரத்தின் உத்தியோகத்தரொருவரை அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாரபதி அல்லது தலைமை புத்த பிக்கு ஒருவரை அல்லது பிற மத புனித தளமொன்றின்பொறுப்பு அல்லது குருவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையினை வகிக்கும் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6.3 தற்போது அரச/ அரச சார்பு மற்றும் மாகாண அரச சேவையில் சேவை புரிகின்ற மேலே 02 இன் கீழ தகைமைகளை நிறைவு செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கும் இப் பதவி தொடர்பில் விண்ணப்பிக்க முடியும். அவ்வாறான விண்ணபதாரிகள் தங்களது விண்ணபத்தினை தமது பிரிவின் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

7. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமொன்று காணப்படுமேயானால் அது தொடர்பில் புகையிரத பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணபதாரிகளும் இவ் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டதிட்டங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருந்தியிருத்தல் வேண்டும். மேலும் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு மற்றும் இணக்கப்பாடற்ற தனமை காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

ரவிந்திர பத்மப்பிரிய,
புகையிரத பொதுமுகாமையாளர்.

இலங்கை புகையிரத திணைக்களம்
ஒல்கோட் மாவத்தை,
த.பெ.இல. 355,
கொழும்பு 10,
2026, யூலை 14.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தில் தங்குமிட பங்களா உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் – 2026**

1. நேர்முக பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழி மூலம்(சிங்களம்/தமிழ்):

..............................................................................................................................................

2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................................................................

..............................................................................................................................................

3. முதலெழுத்துக்களுடன் பெயர்(சிங்களத்தில்/ தமிழில்) :

.......................................................................................................................................................................

4. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்(சிங்களத்தில்/ தமிழில்):

.......................................................................................................................................................................

5. முகவரி ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)(நழைவுச்சீட்டுக்கள் இவ் முகவரிக்கு தயாலிடப்படும்.):

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

6. தொலைபேசி இலக்கம்:

6.1 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம்

(இல்லம்/கைப்பேசி) :...........................................................................................................................

6.2 WHATSAPP தொலைபேசி இலக்கம் :.........................................................................................................

6.3 உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கம்: ..................................................................................................

7. ஆண்/பெண்: ................................................................................................................................................

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் ........................................................................................................

9. விவாகமானவர்/விவாகமாகாதவர் :.............................................................................................................

10. பிறந்த திகதி: வருடம் :................... மாதம் :..................... திகதி:......................

11. விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு வயது : வருடம் :.................. மாதம் :.....................திகதி :............

12. கல்வித் தகைமைகள்:

க.பொ.த.(சா/தரம்) (முதலாம் தடவை) :

வருடம் : …………… மொழி மூலம் :....................... பரீட்சை சுட்டெண் : ……………………

| *பாடம்* | *சித்தி* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

க.பொ.த.(சா/தரம்) (இரண்டாம் தடவை) :

வருடம் : …………… மொழி மூலம் :...................... பரீட்சை சுட்டெண் : ……………………

| *பாடம்* | *சித்தி* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

க.பொ.த.(உ/தரம்) :

வருடம் : ……………… மொழி மூலம் :......................... பரீட்சை சுட்டெண் : ……………………

| *பாடம்* | *சித்தி* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

13. துறைச் சார்ந்த தொழிற்சார் பாடநெறிகள் :

| *பாடநெறி* | *நிறுவனம்* | *பாடங்கள்* | *பெறுபேறு* |
|---|---|---|---|
| | | | |

14. துறைச் சார்ந்த சேவை அனுபவம் :

| *பதவி* | *நிறுவனம்* | *சேவைக் காலம்* | *செய்த வேலை* |
|---|---|---|---|
| | | | |

15. தற்போது ஏதேனும் பதவியினை வகிப்பவர் என்றால் அதைப் பற்றிய விபரம்:

I. பதவி மற்றும் தரம்: ......................................................................................

II. நியமன திகதி: ...................................................................................................

III. நிறுவனம்: ........................................................................................................

16. விண்ணப்பதாரியின் கையொப்பம்:

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய உண்மையானவை எனவும் இந்நேர்முக பரீட்சை தொடர்பிலான ஏற்பாடுகள் உள்ளடங்கிய சேவை நடைமுறைக்கமைய நான் தகைமை அற்றவர் என தெரியவருமிடத்து நேர்முக பரீட்சைக்கு முன் அல்லது அது நடைபெறுகையில் அல்லது அதற்கு பின் என்னுடைய எதிர்பார்க்கையினை இரத்து செய்வது தொடர்பில் இணங்குகிறேன். மேலும் இப் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் நான் கீழ் படிவதையும் இத்தால் தெரியப்படுத்துகிறேன்..

திகதி: ..............................                                        கையொப்பம்.............................................

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பத்தினை முன்வைக்கின்ற .......................................................................................................................... .............................. (முழுப் பெயர்) என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கு அறிவேன் என்றும்,............................ ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ..............................                                        கையொப்பம்.............................................
பெயர்: ......................................................
பதவி : ..............................................
முகவரி : .............................................
(உத்தியோகபூர்வ இலட்சினை)

18. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரசாங்க/மாகாண அரச/அரச சார்பு சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்):

இவ் விண்ணப்பத்தினை முன்வைக்கின்ற திரு/திருமதி/செல்வி ................................................................ இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/நிறுவனத்தில் ........................................ ஆக சேவை புரிவதோடு அவரது விண்ணப்பத்தினை பரிந்தரைத்து முன்வைக்கின்றேன். இப் பதவிக்காக இவர் தெரிவு செய்யப்படுமிடத்து இந் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

திகதி:..................................                                        நிறுவனத் தலைவரின் கையொப்பம் ...........................
பெயர்: ......................................................
பதவிப் பெயர் :.............................................

(உத்தியோகபூர்வ இலட்சினை)

07-362

## இராணுவ தொண்டர் படையணிக்கு கெடெட் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோருதல்

1. இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு கெடெற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படும்.

2. இலங்கையில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து விடுகை பெறும் கெடெற் உத்தியோகத்தர்களுக்கு இராணுவக் கற்கையில் டிப்ளோமா வழங்கப்படும். அவர்கள் இரண்டாம் லெப்டினன்ட் எனும் ஆரம்ப நிலையில் அதிகாரவாணை வழங்கப்பட்டு தகைமைகளுக்கும் இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இலங்கை இராணுவ தொண்டர்ப் படையணிக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **அடிப்படை தகைமைகள் :**

| | | |
|---|---|---|
| அ. | குடியுரிமை | : இலங்கை பிரசையராக இருத்தல் வேண்டும். |
| ஆ. | குடியியல் | : திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். |
| இ. | வயது | : 2026, யூலை மாதம் 30 ஆந் திகதிக்கு ஆண்கள் 18 வயதுக்கும் 26 வயதுக்கும் இடைப்பட்டவராகவும், பெண்கள் 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். |
| ஈ. | உயரம் | : ஆண்கள் 5 அடி 6 அங்குலத்திற்கு (170.6 cm) குறையாதும் பெண்கள் 5 அடி 3 அங்குலத்திற்கு (162 cm) குறையாதும் இருத்தல் வேண்டும். |
| உ. | நிறை | : ஆண்கள் 50 கிலோவுக்கு (110 இறாத்தல்) பெண்கள் 45 கிலோவுக்கு (99 இறாத்தல்) குறையாது இருத்தல் வேண்டும். |
| எ. | பார்வைக் கூர்மை | : 6/6 (மூக்கு கண்ணாடி மற்றும் வில்லை பாவிக்காது) இருத்தல் வேண்டும். |
| ஏ. | உடற்திணிவு சுட்டி (B.M.I. Index) | : ஆண்கள் 18.5 $Kg/m^2$ - 24.9$Kg/m^2$ இற்கு இடைப்பட்டதாகவும் பெண்கள் 18.5 $Kg/m^2$ - 24.9$Kg/m^2$ இற்கு இடைப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். |

4. **கல்வித் தகைமைகள்:**

அ. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சை அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை மற்றும் அதற்கு இணையான வேறு சர்வதேச பரீட்சைகளில் (Pearson, Edexel, GCSE, GCE அல்லது Cambridge) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆங்கிலம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க.பொ.த. (உயர் தரம்) பரீட்சை அல்லது அதற்கு சமமான தகைமையுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த. (உயர் தரம்) பரீட்சை மற்றும் அதற்கு இணையான வேறு சர்வதேச பரீட்சையில் (Pearson, Edexel, GCSE, GCE அல்லது Cambridge) ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பொது சாதாரண பரீட்சையில் 30% புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்.;

இ. உயர்கல்வி தகைமை அல்லது விளையாட்டு வெற்றிகள் பெற்றிருப்பின் மேலதிக தகைமையாக கருதப்படும்.

5.**வேறு தகைமைகள்** : சர்வதேச/தேசிய/மாகாண/மாவட்ட மட்டத்தில் விளையாட்டு, தலைமைத்துவம், வேறு வெற்றிகளை பெற்றிருத்தல் மற்றும் பிற மொழிகளை கையாளக்கூடிய திறமை (சிங்களம் மற்றும் ஆங்கிலம் தவிர) விசேட தகைமைகளாக கருதப்படும்.

6.பொது :

அ. இராணுவ தளபதியினால் நிர்ணயிக்கப்பட்டு, அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பிலான நிபந்தனைகளை பூர்த்தி செய்தவர் மட்டுமே தொண்டர் படையணியின் உத்தி யோகத்தராக அதிகாரவாணை பெறுவதற்கு தகுதியடையவராவார்.

ஆ. 1956, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் இலங்கை தொண்டர் படையணிக்கு அதிகாரவாணை யுடன் இணைத்துக் கொண்ட சகல புதிய உத்தியோகத்தர்களும் அரச மொழி தொடர் பிலான தகைமைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழி சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அரச கரும மொழி கொள்கையினை செயற்படுத்த தற்போது நடைமுறைப்படுத்தும் மற்றும் எதிர் காலத்தில் முன்வைக்கப்படும் ஏதேனும் கட்டளைக்கு அல்லது நிபந்தனைக்கு அமைவாக செயற் படல் வேண்டும்.

இ. உத்தியோகத்தர் ஒருவரினது இலங்கை பிரஜா உரிமை இரத்துச் செய்யப்படும் பட்சத்தில் உரிய உத்தியோகத்தரினால் இராணுவ தளபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

ஈ. தொண்டர் படையணியில் சேவையாற்று கையில் எந்தவொரு உத்தியோகத்தரும் இலங்கை கடற்படை அல்லது இலங்கை விமானப்படையில் இணைந்துக் கொள்ளல் ஆகாது.

உ. நிரந்தர படை, நிரந்தர உபசேவை, இலங்கை பொலிஸ் மற்றும் இலங்கை சிறைச்சாலை சேவை என்பவற்றின் உறுப்பினர்கள் தொண்டர் படையணியில் அதிகாரவாணை பெற்றுக்கொள்ள முடியாது.

ஊ. அரச மொழி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நிரந்தர படையின் அரச சேவையில் அரச தாபனத்தின், அரச நிறுவனத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தில் ஓய்வு பெற்ற அல்லது நீக்கப்பட்ட எவருக்கும் தொண்டர் படையணி அல்லது படையலகின் சேவைக்கு அதிகாரவாணை வழங்கப்படுவதில்லை.

எ. கடுமையான குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட எவருக்கும் தொண்டர் படையணி அல்லது படையலகின் சேவைக்கு அதிகாரவாணை வழங்கப்படுவதில்லை.

ஏ. பயிற்சி பெறும் காலப்பகுதியில் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்குத் திருமணம் செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஐ. நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர் களும் ஆட்சேர்ப்புக்கு முன்னர், இலங்கை இராணுவத்தினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், அதில் சித்தியடைதல் வேண்டும்.

7. சேவை நிபந்தனைகள் :

அ. பயிற்சிக் காலம் உட்பட 05 வருடங்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடு படுதல் வேண்டும். அதற்காக, இலங்கை இராணுவத்துடன் பிணைமுறியொன்றிக்கும் ஒப்பந்தமொன்றிக்கும் உட்படுத்தப்படுவர்.

ஆ. பயிற்சிக் காலத்தில் கெடெட் உத்தியோகத்தர் ஒருவரின் மாத சம்பளம் ரூ. 109,015.08 ஆகும். (அனைத்து கொடுப்பனவுகள் அடங் கலாக). கெடெட் உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றும் காலப்பகுதியில் அவர்கள் எந்தவொரு சம்பள அதிகரிப்புக்கும் உரித் துடையவராக மாட்டார்.

இ. கெடெட் உத்தியோகத்தர்கள் இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் 15 மாத கால பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியில் கெடெட் உத்தி யோகத்தர்களின் அந்தஸ்து சாதாரண சிப்பாய் களுக்கு சமமாக இருக்கும் என்பதுடன், அவர்கள் இராணுவச் சட்டத்திற்கும் சிவில் சட்டத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

உ. **பாடநெறியிலிருந்து விலகுதல்/நீக்குதல்**

(1) பயிற்சிக் காலப்பகுதியில் கெடெட் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பில் தனது அதிகாரவாணைக் கான அபேட்சகத்துவத்தை முடிவுறுத்து வாராயின், கெடெட் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு அதுவரை ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகா வலர் அல்லது பிணையாளர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(2) கெடெற் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அல்லது துர்நடத்தை காரணமாக விலக்குதல், தனது மோசமான பாதுகாப்பு அறிக்கை, தன்னால் தவிர்க்க கூடிய காரணிகள் காரணமாகவோ அதிகாரவாணை வழங்கப்படுவதற்கு தகுதியற்றவர் என உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், உத்தியோகத்தர் சார்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(3) மேலும், மேல் பந்தி 01 மற்றும் 02 இற்கு அமைய கெடெட் உத்தியோகத்தர் கையொப்பமிட்டு ஏற்றுக்கொண்ட பிணைமுறிக்கு அமைவாக ஒப்பந்த காலத்திற்கு முன்னதாக இராணுவத்திலிருந்து விலகுவாரேயாயின் முழு பிணைமுறி பெறுமதியினையும் செலுத்தல் வேண்டும்.

(3) பாடநெறியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட அல்லது மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தகுதியற்றவர் என பயிற்சியிலிருந்து நீக்கப்பட்ட கெடெட் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் இலங்கை இராணுவத்தின் கெடெற் உத்தியோகத்தர் ஒருவராக இணைந்து கொள்ள முடியாது.

8. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**: இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணி உத்தியோகத்தர்களாக இரண்டாம் லெப்டினன்ட் நிலையில் அதிகாரவாணைக்கு நியமிக்கப்படும் போது, அவர்கள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள்.

| *தொடர் இல.* | *நிலை* | *அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 5/2025 இன் படி* | |
|---|---|---|---|
| | | *அடிப்படை சம்பளம் 2026.01.01 திகதி முதல்* | *சகல கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக சம்பளம்* |
| 1 | கெடெட் உத்தியோகத்தர் | ரூ. 51,244.00 | ரூ. 109,015.08 |
| 2 | இரண்டாம் லெப்டினன்ட் | ரூ. 60,709.00 | ரூ. 123,718.30 |
| 3 | லெப்டினன்ட் | ரூ. 74,438.00 | ரூ. 137,447.30 |
| 4 | கெப்டன் | ரூ. 86,601.00 | ரூ. 149,610.30 |
| 5 | மேஜர் | ரூ. 94,710.00 | ரூ. 158,419.30 |
| 6 | லெப்டினன்ட் கேணல் | ரூ. 97,192.00 | ரூ. 165,776.30 |
| 7 | கேணல் | ரூ. 117,857.00 | ரூ.189,566.30 |
| 8 | பிரிகேடியர் | ரூ. 124,446.00 | ரூ. 201,980.30 |
| 9 | மேஜர் ஜெனரல் | ரூ. 136,575.00 | ரூ.214,109.30 |

9. **ஏனைய கொடுப்பனவுகள்:**

(அ) **பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.**

(1) தகைமைக் கொடுப்பனவுகள்.

(2) இலவச உணவு அல்லது உணவுக் கொடுப்பனவுகள்.

(3) உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி குலைவுப்படி (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்).

(4) சீருடை பேணல் கொடுப்பனவு.

(ஆ) பின்வரும் வசதிகள் வழங்கப்படும் /கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

(1) உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச தங்குமிட வசதி.
(2) வாடகை வீடுகளில் வசிக்கும்போது மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு வாடகை.
(3) இலவச சீருடை.
(4) திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை.
(5) உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தளத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டு.

10. இங்கு கீழே பந்தி 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பதாரர்களை நியமிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். தந்தை உயிருடன் இருக்கும் கெடெட் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பார்.

11. விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்.

அ. நான், இலங்கை இராணுவத்தின் கெடெட் உத்தியோகத்தர் விண்ணப்பதாரரான......................என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் தொடர்பிலான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்பதாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகாரவாணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறித்த விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தரப்பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணமாக) அதிகாரவாணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாயின், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

(4) மேலும் விண்ணப்பதாரர்கள் கையொப்பமிட்ட பிணைமுறிக்கு அமைவாக பந்தி இல. 02 மற்றும் 03 இற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் காரணமாக ஒப்பந்த காலத்திற்கு முன்னதாக இராணுவத்தலிருந்து வெளியேறுவாராயின் பிணைமுறியின் முழுத் தொகையினையும் செலுத்தல் வேண்டும்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

……………………………………….
தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்):…………………………………
திகதி:..............................................................
சாட்சிக் கையொப்பம்:…………………………………
பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்):……………………………………

12. **மொழித் தேவைகள் :**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள்,1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கு அமைவாகவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

13. **அடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

(அ) விண்ணப்பதாரர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்களை சமர்ப் பித்தல் வேண்டும். அதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மா அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத் தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஆ) பொதுச் சேவை திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள், சிவில் நிறுவனங்கள், மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை, தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் சான்றிதழுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

14. **விண்ணப்பங்களை முன்வைக்கும் முறை** :

விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2026, யூலை 30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "இலங்கை இராணுவத் தொண்டர் படை யணி தலைமையகம், இராணுவ வளாகம், சீத்தாவாக்க, கொஸ்கம" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இராணுவ தொண்டர் படைணி தலைமையகம், இராணுவ வளாகம், சீத்தாவக்க, கொஸ்கம" என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின இடது பக்க மேல மூலையில் "இராணுவ தொண்டர் படையணி கெடெட் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், இத்தலைமையகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவும் மாட்டாது. மேலதிக விபரங் களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வ தற்கும் www.army.lk அல்லது slavf.join us எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கவும்.

15. விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றி தழ்களின் பிரதிகள் அனுப்புதல் வேண்டும்:

அ. பிறப்புச் சான்றிதழ் ;

ஆ. கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள். (கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டும் க. பொ. த. (உ/த) மற்றும் க. பொ. த. (சா/த) பெறுபேறாக இருத்தல் வேண்டும்) ;

இ. பாடசாலை விடுகைச் சான்றிதழ் ;

ஈ. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் ;

உ. பொலிஸ் நற்சான்றிதழ் ;

ஊ. விளையாட்டு மற்றும் இணைபாடச் செயற்பாடுகளுக்கான சான்றிதழ்கள் ;

எ. விண்ணப்பதாரரை அறிமுகமான (நற்சாட்சிப் பத்திரமொன்றை வழங்கக்கூடிய ஒருவரிட மிருந்து) நபர்களிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பதாரர் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திர மொன்றும் ;

ஏ. பொருத்தமான ஏனைய / உயர் கல்வி சான்றி தழ்கள் ;

ஐ. மேலும், தேசிய ஆளடையாள அட்டையின் நிழற்படப் பிரதியொன்றையும், கிராம உத்தி யோகத்தரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அண் மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2" x 21/2" அளவிலான புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

16. **நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் :**

(அ) மேற்குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்ப தெரிவுக்கு உட்படுத் தப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற் றுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப் பதாரிகள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப் படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

(ஆ) தேர்வுக் குழுவினால் நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம், நேரம் மற்றும் திகதி என்பன மின்னஞ்சல் ஊடாக

அறியத்தரப்படும். நேர்முகப் பரீட்சை இலங்கை இராணுவ தொண்டர் படையணி கொஸ்கமவில் நடாத்தப்படும். இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் செலுத்தப்படமாட்டாது.

(இ) விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நற்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரியொருவரின் தேர்வை எந்தவகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப்பதாரியை தகுதி இழக்கச் செய்யும்.

(ஈ) ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப்படுகின்ற மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

குறிப்பு - இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப் பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீ கே ஜீ எம் எல் ரொத்திரிகோ ஆர்எஸ்பீ சீடீ-எப் என்டீயூ பீஎஸ்சீ ஐஜி,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி,
அக்குரேகொட வீதி,
பத்தரமுல்லை,
2026, யூலை 07.

07-381

---

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

## மருத்துவத் துறைக்கான துணை தொழில்கள் சேவைகளில் மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்ப நிபுணர் பதவிகளின் பொருட்டு திசைமுகப்படுத்தல் மற்றும் இசைவாக்கல் பாடநெறிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் - 2026

1. சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மருத்துவப் பயிற்சிக்கான துணைத் தொழில் சேவையில் மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்ப நிபுணர் பதவிக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்திலிருந்து பட்டம் பெற்ற பின்வரும் தகுதி வாய்ந்த இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. பதவிக்குத் தொடர்புடைய கல்வி மற்றும் பிற சிறப்புத் தகுதிகள் :

(அ) கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியும் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் இரண்டு பாடங்களில் ஒரே தடவையிலும் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது வேறு பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட 120 பாட மதிப்பெண்ணுள்ள கற்கைநெறியொன்றில் (மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம்) (BSc in Medical Laboratory Science) விசேட பட்டம் பெற்றிருத்தல்

(இ) மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்ப நிபுணராக இலங்கையில் கருமமாற்றுவதற்கு இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

3. **பிற பொதுத் தகுதிகள் :**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும்.

(ஆ) பதவியின் கடமைகளைச் செய்வதற்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

(இ) இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருக்க வேண்டும்.

(அ) 2026.08.07 தேதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட பட்டம் நடைமுறைக்கு வரும் தேதியானது, விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதித் தேதிக்கு குறைந்த பட்சம் ஒரு நாள் முன்னதாக இருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியன்று, அனைத்துத் தகுதிகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்கவேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் தங்கள் தகுதிகளை நிரூபிக்க, விண்ணப்பப் படிவத்துடன் தொடர்புடைய சான்றிதழ்களின் நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவமானது, இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் அதற்கு A4 அளவு தாளைப் பயன்படுத்த வேண்டும். (1 முதல் 8 வரையிலான எண்கள் முதல் பக்கத்திலும், 09 முதல் 13 வரையிலான எண்கள் இரண்டாம் பக்கத்திலும், 14 முதல் 15 வரையிலான எண்கள் மூன்றாம் பக்கத்திலும் இருக்க வேண்டும்).

(ஆ) விண்ணப்பப் படிவத்தின் "ரசீது" என்ற இடத்தில் ரூ. 1,000.00, இலங்கை வங்கி, தப்ரோபெனே கிளை,"சுகாதாரச் செயலாளர் தேர்வுக் கட்டண வசூல்" கணக்கு எண் 7041318 இல் வரவு வைக்கப்பட்டு, அதற்கான ரசீது பத்திரமாக ஒட்டப்பட வேண்டும். (விண்ணப்பத்தை ஒட்டு வதற்கு முன் அதன் ஒரு நகலை வைத்துக் கொள்ளவும்)

(இ) விண்ணப்பப் படிவத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சத்தியபிரமாண ஆணையாளர் அல்லது ஒரு வழக்கறிஞர் அல்லது பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது முப்படைகளின் கண்காணிப்பு அதிகாரி அல்லது காவல் துறையில் வர்த்தமானிப் பதவியில் உள்ள அதிகாரி அல்லது மாநில அல்லது மாகாண அரசுப் பணியில் நிரந்தரப் பணியாளர் தரப் பதவியில் இருந்து,ஆண்டுக்கு ரூ. 854,880 க்கு மேல் மொத்த ஊதியம் பெறும் அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்கள், 9 x 4 அளவுள்ள உறையில் இடப்பட வேண்டும். அந்த உறையின் மேற்புறத்தில் "மருத்துவத் துறைக்கான துணை தொழில்கள் சேவைகளில் மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்ப நிபுணர் பதவிகளின் பொருட்டு திசைமுகப்படுத்தல் மற்றும் இசைவாக்கல் பாடநெறிக்காக பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்தல் - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, சம்பந்தப்பட்ட பட்டம் மற்றும் கல்வி ஆண்டு குறிப்பிடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் இயக்குநர் (நிர்வாகம்) 02, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, எண் 106, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு 2026.08.07 திகதிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ அனுப்பப்பட வேண்டும்.

5. அரசு அல்லது பகுதி-அரசு நிறுவனங்களின் அலுவலர்கள் தங்களது துறைத் தலைவர் மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

6. உரிய திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங் களுக்கு ஒப்புதல் அளிக்கப்படாது மற்றும் அவை நிராகரிக்கப்படும். இந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள தேவைகள் மற்றும் வடிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

7. பட்டதாரிகளின் பட்டங்கள் நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட பட்டதாரிகளின் தரப்புள்ளி சராசரி (GPA) ஆகியவற்றின் அடிப்படையில் தகுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பயிற்சிப் பாட நெறிக்குத் தகுதியான விண்ணப்பதாரர்கள் தேர்ந் தெடுக்கப்படுவார்கள். இந்தப் பட்டதாரிகளின் ஆட்சேர்ப்பு தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிப்பில் (2024.07.05) விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிக்குப் பிறகு பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

08. வெற்றிட இடங்களின் எண்ணிக்கையை விட அதிகமான பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தால், திசை முகப்படுத்தல் மற்றும் இசைவாக்கல் பாட நெறிக்காக ஆட்சேர்ப்புக்காக, பொது அறிவு மற்றும் நுண்ணறிவு குறித்த 01 மணி நேர வினாத்தாளைக் கொண்ட எழுத்துத் தேர்வு நடத்தப்படும். மேலும், அந்தத் தேர்வில் காட்டிய தகுதியின் அடிப்படையில், ஒதுக்கப்படக் கூடிய வெற்றிட இடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான வர்கள் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

09. நேர்முகப் பரீட்சைப் போது, விண்ணப்பதாரர்கள்/ வேட்பாளர்கள் பின்வரும் ஆவணங்களின் அசல் பிரதி களையும் அவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்

II. பட்டச் சான்றிதழின் அசல் நகல் (இதன் சான்றளிக்கப்பட்ட நகலும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

III. விரிவான பட்டச் சான்றிதழின் (Transcript) அசல் நகல்

IV. க.பொ.த. (உ/ த) தேர்வு முடிவுச் சான்றிதழின் அசல் நகல்.

V. தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம்.

VI. மருத்துவ மன்றத்தில் (SLMC) பதிவு செய்ததற்கான சான்றிதழ்.

10. **பயிற்சி நடைமுறை:**

I. நேர்காணல் செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், ஆங்கில வழிப் பாடத்தில் திருத்த மற்றும் தகவமைப்புப் படிப்பை மேற்கொள்வதற்காக 06 மாத காலத்திற்கு மருத்துவமனைகள் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைக்கப்படுவார்கள்.

II. பயிற்சி பெறுபவர்கள், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சகத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் பிற விதிமுறைகளுக்கும் உட்பட்டிருப்பார்கள்.

III. பயிற்சிக் காலத்தின் முடிவில், பயிற்சியை வெற்றிகரமாக முடிக்காதவர்கள், யாருடைய பணியும் நடத்தையும் திருப்திகரமாக இல்லையோ அல்லது அவர்கள் இணைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பணியிலும் நடத்தையிலும் திருப்தி அடையாதவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

IV. பயிற்சிக் காலத்தில், பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் விதிகளின்படி பயிற்சியாளர்களுக்குப் படிகள் வழங்கப்படும்.

14. இந்நிபந்தனைகள் மற்றும் பாடத்திட்டத்திற் குறிப்பிடப் பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்துப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப் பட்டிருக்கும் அதேவேளை, இந்நிபந்தனைகளிற் குறிப் பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

15. தமிழ்மொழி மூலம் மாத்திரமே அறிவித்தல்கள் வெளி யிடப்படும். அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே,
பரீட்சை ஆரைணயாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல,
2026, யூலை 24.

**உப அட்டவணை 01**

**பரீட்சை நகரங்களும் நகர இலக்கங்களும்**

| கொழும்பு மாவட்டம் - 01 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| மருதானை | 0101 |
| பம்பலப்பிட்டி | 0102 |
| நுகேகொடை | 0103 |
| அவிசாவளை | 0104 |

| கம்பஹா மாவட்டம் - 02 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

| களுத்துறை மாவட்டம் - 03 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| களுத்துறை | 0301 |
| பாணந்துறை | 0302 |
| நுகேகொடை | 0303 |
| அவிசாவளை | 0304 |

| கண்டி மாவட்டம் - 04 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| கண்டி | 0401 |
| புசல்லாவ | 0402 |
| கலஹா | 0403 |
| கம்பளை | 0404 |
| நாவலப்பிட்டி | 0405 |

| மாத்தளை மாவட்டம் - 05 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| மாத்தளை | 0501 |
| இரத்தோட்டை | 0502 |

| நுவரெலியா மாவட்டம் - 06 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| நுவரெலியா | 0601 |
| ஹற்றன் | 0602 |
| தலவாக்கலை | 0603 |
| மஸ்கெலியா | 0604 |

| காலி மாவட்டம் - 07 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| காலி | 0701 |

| மாத்தறை மாவட்டம் - 08 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| மாத்தறை | 0801 |
| தெனியாய | 0802 |

| மாத்தறை மாவட்டம் - 09 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| ஹம்பாந்தோட்டை | 0901 |

| யாழ்ப்பாணம் மாவட்டம் - 10 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| யாழ்ப்பாணம் | 1001 |
| சாவகச்சேரி | 1002 |
| பருத்தித்துறை | 1003 |
| வேலணை | 1004 |
| நெடுந்தீவு | 1005 |

| மன்னார் மாவட்டம் - 11 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| மன்னார் | 1101 |

| வவுனியா மாவட்டம் - 12 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| வவுனியா | 1201 |
| செட்டிக்குளம் | 1202 |

| முல்லைத்தீவு மாவட்டம் - 13 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| முல்லைத்தீவு | 1301 |
| புதுக்குடியிருப்பு | 1302 |
| ஒட்டுச்சுட்டான் | 1303 |

| கிளிநொச்சி மாவட்டம் - 14 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| கிளிநொச்சி | 1401 |
| பூநகரி | 1402 |
| முழங்காவில் | 1403 |
| பளை | 1404 |

| மட்டக்களப்பு மாவட்டம் - 15 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| மட்டக்களப்பு | 1501 |
| களுவாஞ்சிக்குடி | 1502 |
| வாழைச்சேனை | 1503 |
| செங்கலடி | 1504 |

| அம்பாறை மாவட்டம் - 16 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| அம்பாறை | 1601 |
| அக்கரைப்பற்று | 1602 |
| கல்முனை | 1603 |
| திருக்கோவில் | 1604 |
| பொத்துவில் | 1605 |
| சம்மாந்துறை | 1606 |

| திருகோணமலை மாவட்டம் - 17 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| திருகோணமலை | 1701 |
| மூதூர் | 1702 |
| வெருகல் | 1703 |

| குருநாகல் மாவட்டம் - 18 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| குருநாகல் | 1801 |

| புத்தளம் மாவட்டம் - 19 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| புத்தளம் | 1901 |

| அநுராதபுரம் மாவட்டம் - 20 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| அநுராதபுரம் | 2001 |

| பொலநறுவை மாவட்டம் - 21 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| பொலநறுவை | 2101 |

| பதுளை மாவட்டம் - 22 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| பதுளை | 2201 |
| வெலிமடை | 2202 |
| பண்டாரவளை | 2203 |
| அப்புத்தளை | 2204 |
| பசறை | 2204 |

| மொணராகலை மாவட்டம் - 23 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| மொணராகலை | 2301 |
| பிபிலை | 2302 |

| இரத்தினபுரி மாவட்டம் - 24 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| இரத்தினபுரி | 2401 |
| கஹவத்தை | 2402 |
| பலாங்கொடை | 2403 |
| இறக்குவானை | 2404 |

| கேகாலை மாவட்டம் - 25 | |
|---|---|
| *நகரம்* | *நகர எண்* |
| கேகாலை | 2501 |
| யட்டியாந்தோட்டை | 2502 |
| வரக்காப்பொல | 2503 |

**உப அட்டவணை - 02**

**அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை**

**இந்துசமய பாடத்திட்டம்**

இப்பரீட்சையானது 3 (மூன்று) மணித்தியாலங்கள் கொண்ட 4 (நான்கு) வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

01. சமய வரலாறு

02. சமய மெய்யியல்

03. சமய இலக்கியம்

04. சமய வாழ்வியல்

**01. சமய வரலாறு :**

1.0 இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு

1.1 சிந்துவெளி நாகரீகம்
1.2 சனாதன தர்மம்
1.3 வேதகாலம்
**1.3.1 வேதகால தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும்**
1.4 இதிகாசங்கள்
1.4.1 வகை
1.4.2 தோன்றக் காரணம்
1.4.3 பகவத் கீதை
1.5 புராணங்கள்
1.5.1 பதினென் புராணவகை தோன்றக் காரணம்
1.6 தருமசாத்திரங்கள்

2.0 சைவசமய வரலாறு

2.1 சைவ சமயத்தின் தொன்மை
2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிகாடும்

3.0 தமிழகத்துச் சைவசமய வரலாறு

3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
3.2 பக்திநெறி
3.2.1 காரைக்காலம்மையார்
3.2.2 சமயகுரவர் நால்வர்
3.2.3 ஆலயங்களும், வழிபாடும்
3.3 சாத்திரங்களும் தோத்திரங்களும்
3.3.1 கோயில் கட்டிங்களின் வளர்ச்சி
3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தம் தொகுப்பு
3.3.3 சந்தான குரவர் நால்வர்
3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்
3.4 சைவ நிறுவனங்கள்: மாடங்களும் ஆதீனங்களும்
3.5 ஞானியர் வரலாறு : திருமூலர்

4.0 இலங்கையில் சைவம்

4.1 தொன்மை
4.2 புராதன ஆலயங்கள் (சிறப்பாக)
திருக்கேதீச்சரம்
திருக்கோணேஸ்வரம்
முன்னேச்சரம்
நகுலேஸ்வரம்
கொக்கட்டிச்சேலை தான்தோன்றீச்சரம்
4.3 பிரதேச ஆலய வரலாறு
(மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5.0 இலங்கையில் சைவ மறுமலர்ச்சி

5.1 பெரியார்கள்
5.1.1 ஆறுமுகநாவலர்
5.1.2 விபுலானந்தர்
5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
5.3 ஞானியர்

**02. சமய மெய்யியல்**

1.0 வேதங்கள்

1.1 பல தெய்வக் கோட்பாடு
1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
1.3 வேதப் பிரிவுகள்

2.0 உபநிடதங்கள்

2.1 மகாவாக்கியங்கள்
2.2 அறக் கோட்பாடு

3.0 பகவத்கீதை

3.1 நால்வகை யோகம்

4.0 மூவகை வேதாந்தங்கள்

4.1 அத்துவைதம்
4.2 விசிட்டாத்வைதம்
4.3 துவைதம்
(இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5.0 சைவ சித்தாந்தம்

5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
5.2 சற்கரிய வாதம்
5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
5.6 சிவசின்னங்கள்
5.7 தீட்சை

6.0 திருவருட்பயன் - 10 அதிகாரரம்

03. **சமய இலக்கியம்**

1.0 திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசம்பந்தர் தேவாரம்
(அ) "வேயுறு தோளி பங்கன் ....."
(பதிகம் முழுவதும்)

1.2 அப்பர் தேவாரம்
(அ) "மாதர் பிறை கண்ணியானை......"
(பதிகம் முழுவதும்)

1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
"நந்தார் படை............"
(பதிகம் முழுவதும்)

1.4 மாணிக்கவாசகர் -திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்

1.5 திருவிசைப்பா
(அ) "அற்புதத் தெய்வம் ....."
(ஆ) "கற்றவர் விழுங்கும்......."

1.6 திருப்பல்லாண்டு
(அ) "சீரும் திருவும் பொலிய ....."
(ஆ) "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்......."
(இ) "மிண்டு மனத்தவர்..................."

1.7 திருப்புராணம்
(அ) "ஐந்து பேரறிவும் ....."
(ஆ) "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன்......."
(இ) அண்ணலார் தமக்கீடு......."

1.8 திருமந்திரம்
(அ) "அன்பும் சிவமும் ....."
(ஆ) "உள்ளம் பெருங்கோயில்......."
(இ) "யாவர்க்குமாம் .................."

1.9 இரண்டாம் திருமுறை
மூத்தநாயனார் திருவீரட்டை மணிமாலை - கபிலதேவ நாயனார் "திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்.........."
காரைக்காலம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி "கண்ணாரக் கண்டும் என் கையாரக் கூப்பியும்.........."

2.0 ஏனைய தோத்திரப் பாடல்கள்

2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்
(அ) "எதிரிலாத பக்தி ....."
(ஆ) "பக்தியால் யானுணை ....."

2.2 அபிராமி அந்தாதி - அபிராமிப்பட்டர்
(அ) "நின்றும் இருந்தும் கிடந்தும் ....."
(ஆ) "சித்தியும் சித்தி தரம் தெய்வமுமாகி....."
(இ) "கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் ....."

2.3 பராபரக்கண்ணி - தாயுமானவர்
(அ) "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க ..........."
(ஆ) "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ....."
(இ) "விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும் ....."
(ஈ) சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் ........... "
(உ) "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே ............"

3.0 திவ்விய பிரபந்தங்கள்
திருப்பாவை - ஆண்டாள்
(அ) "மாரிமழை முழைஞ்சல் முன்னி கிடத்துறங்கும் .........."
(ஆ) "அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி ............."
(இ) "மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் .........."

4.0 கந்தபுராணம்
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவுசெய்யப்பட்டவை) - பாடல் ஒன்று முதல் இருபது வரை

5.0 பெரியபுராணம்
கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6.0 திருவிளையாடற் புராணம் -பரஞ்சோதி முனிவர்
(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 வரை

7.0 நீதிப்பாடல்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்
(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்
(ஆ) இல்வாழ்க்கை - 5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை - 13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை - 14 ஆம் அதிகாரம்
(உ) நட்பு - 79 ஆம் அதிகாரம்

04. **சமய வாழ்வியல்**

1.0 ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்

1.1 திருக்கோயில் அமைப்பு
1.2 திருக்கோயில் வழிபாடு
1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2.0 வீட்டில் வழிபாடு

2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)
2.2 விசேட வழிபாடு
(அ) கூட்டு வழிபாடு
(ஆ) தியானம்
(இ) செயல்
2.3 அகப்புறத் தூய்மை

2.0 வீட்டில் வழிபாடு

- 2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)
- 2.2 விசேட வழிபாடு
  - (அ) கூட்டு வழிபாடு
  - (ஆ) தியானம்

3.0 விரதங்களும் பண்டிகைகளும்

- 3.1 விரதங்கள்
  - (அ) சிவராத்திரி
    நவராத்திரி
    விநாயகர் சதுர்த்தி
    கந்தசஷ்டி
    விநாயகர் சஷ்டி
    திருவாதிரை
    பிரதோஷம்
    வைகுண்ட ஏகாதசி
  - (ஆ) அமாவாசை, பூரணை விரதங்கள்
- 3.2 பண்டிகைகள்
  - 3.2.1 தைப்பொங்கல்
  - 3.2.2 சித்திரை வருடப்பிறப்பு
  - 3.2.3 ஆடிப்பிறப்பு
  - 3.2.4 தீபாவளி
  - 3.2.5 கார்த்திகை விளக்கு

4.0 அபரக் கிரியைகள்

- 4.1 பொது விளக்கீடு
- 4.2 மரணக் கிரியைகள்
- 4.3 சபிண்டீகரணம்
- 4.4 சிரார்த்தம்

5.0 சமய, ஆன்மீக விழுமியங்கள்

- 5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
- 5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
- 5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்து கொள்ளல்.

6.0 சமய, வாழ்வுடன் கலைகள்

இசை
நடனம்
கட்டடம்
சாத்துப்படி
மாலைகட்டுதல்
பண்ணிசை
சிற்பம்
ஓவியம்
சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
கோலம் போடுதல்

07-335

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## அஹதிய்யா தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2026

01. 2025 ஆம் ஆண்டுகளுக்கான அஹதிய்யா தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதே வேளை, பரீட்சை 2026, ஒற்றோபர் மாதம் நடாத்துவதற்கான நடவடிக்ைககள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. **பரீட்சை நிலையம்:**

**உப அட்டவணை - 01** இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலுள்ள நகரங்களில் விண் ணப்பதாரர்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும், ஏதேனும் ஒரு நகரத்தில் போதுமானளவு விண்ணப்ப தாரர்கள் காணப்படாத சந்தர்பபத்தில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரர்கள் அந்நகரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வேறொரு பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

03. **மொழி மூலம் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். ஆயினும், விண்ணப்பதாரியொருவருக்கு தான் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரமே பரீட்சைக்குத் தோற்ற இடமளிக் கப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

04. **தகைமைகள்:**

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண் ணப்பதாரர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களில் ஏதாவது ஒன்றையேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அஹதிய்யா தஹம் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் சித்தியடைந்து அஹதிய்யா தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழுக்கான வகுப்பில் குறைந்த பட்சம் ஒரு வருடமேனும் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருத்தல்.

4.2 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இஸ்லாம் சமய பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் இஸ்லாம் மற்றும் அரபுப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5. **விண்ணப்பித்தல்:**

5.1 பதிவு செய்யப்பட்டுள்ள அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபர் ஊடாக முன்வைக்கப்பட வேண்டிய இவ்விண்ணப்பப் படிவங்கள் தபால் மூலமாக அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக (www. doenets.lk) விண்ணப்பப்படிவங்களை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

5.2 உமது அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரி விண்ணப்பப்படிவங்களை விண்ணப் பிக்கும் புதிய அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரிகளாயின் முஸ்லிம் சமய பண்பாட்டலு வல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றிதழின் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5.3 எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்குத் தோற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஆயினும், 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள யாரேனும் பரீட்சைக்கு தோற்ற விரும்புவாராயின் தமது வதிவிடத்திற்கு அருகாமையில் உள்ள அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரி ஊடாக ரூபா 200.00 பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்தும் அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5.4 உரிய அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரிகள் மூலம் முன்வைக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவத்தினை இரண்டு பிரதிகளாக பூரணப்படுத்தி மூலப் பிரதிகளை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அதேவேளை இரண்டாம் பிரதியினை அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபர் தன்வசம் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இரண்டிலும் அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபரினால் கையொப்பம் இடப்பட்டு பதவி முத்திரை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5.5 விஷேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் பரிட்சைக்கு விண்ணப்பிப்பார்களாயின் அது தொடர்பாக விண்ணப்பப்படிவத்தில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியதோடு அது தொடர்பான மருத்துவ சான்றிழகளினது பிரதிகளை விண்ணப்பப்படிவத்தின் பிரதியுடன் இலங்கைப் பரட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

5.6 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2026.07.24 ஆந் திகதி ஆரம்பமாகி 2026.08.24 ஆந் தகதி முடிவுறுத்தப்படும்.

5.7 விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பதாரர்களின் பெயர்களை எழுதும் போது பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய ஆளடையாள அட்டையில் குறிப் பிடப்பட்டுள்ளவாறே எழுதப்படுவதோடு பெறு பேறு வழங்கப்பட்ட பின்னர் பெயர் திருத்தங் களுக்காக கோரிக்கையின் போது அச்சுப்பிழை தவிர்ந்த வேறு எந்தவித கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும்பிழையின்றியும்பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூரணப்பத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்ப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப் பப்படிவங்கள் எந்தவித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.8 பரீட்சைத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தாம் வழங்கிய தகவல்கள் சரியானவையாக என்பதனை தாமாக பரிசீலனை செய்த பின்பே கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறும் வரை சகல பரீட்சார்த்திகளின் தேசிய ஆளடையாள அடையின் பிரதிகளையும் அஹதிய்யா தஹம் பாடசாலை/அரபுக் கல்லூரி அதிபர் தன்வசம் வைத்துக் கொள்ள வேண்டும்.

5.9 விண்ணப்பதாரர்களின் உரிய தகுதிகள் பெற் றிருப்பது பற்றி விண்ணப்பப்படிவங்களை சான்று படுத்தும் அதிபர் அல்லது தலைவர் அதற்குரிய முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5.10 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அஹதிய்யா பாடசாலைகளின்/ அரபுக் கல்லூரிகளின் கணினி இலக்கம் மற்றும் முகவரி பிழையின்றிக் குறிப்பிடப்படுவதோடு அஹதிய்யா பாடசாலைகளின்/ அரபுக் கல்லூரி களின் முகவரி மாற்றம் அடைந்திருப்பின் அதனை அறியத்தருவதோடு அஹதிய்யா பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடவும்.

5.11 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக அறியத்தரப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அஹதிய்யா தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2026" என்பதையும் பரீட்சைக்குத் தோற்றும் நகரத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.12 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் தபாலில் தொலைந்து போதல் அல்லது காணாமல் போதல் மற்றும் தாமதமாக அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவ்கள் தொடர்பாக முன்வைக் கப்படும் மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப் படமாட்டாது என்பதுடன் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதற்கான அனைத்துப் பொறுப்பினையும் உரிய அஹதிய்யா பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபரே பொறுப்பேற்க வேண்டும்.

06. **பரீட்சைக் கட்டணம்** :

இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும் முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. நூன சித்தி பெறுபேற்றை பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் பாடத்திற் கான பரீட்சைக் கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

6.1 **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்:**

குறிப்பிட்ட அஹதிய்யா பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து விண்ணப்பதாரர்களிடமும் பரீட்சைக் கட்டணம் சேகரிக்கப்பட்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் வருமான தலைப்பு இலக்கம் 20-03-02-13 இற்கு வைப்பாகும் வகையில் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு தபால் நிலையத்திலும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்ெகாண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். (அதன் நிழற்படப் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

6.2 எக்காரணத்தினாலும் இப்பரீட்சைக்காக செலுத் தப்படும் கட்டணம் வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ அல்லது மீண்டும் திரும்பச் செலுத்தப்படவோ மாட்டாது.

07. **பரீட்சை அனுமதி அட்டை:**

பரீட்சைக்காக உள்வாங்கப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்குமான அனுமதி அட்டைகள் விண்ணப்பப்படிவங்கள், முன்வைக்கப்பட்ட அஹதிய்யா பாடசாலை/ அரபுக் கல்லூரி அதிபர்களுக்கு பரீட்சை ஆணையாளர் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது அனுமதி அட்டையில் கவனமாக கையொப்பத்தினை சான்றுப்படுத்தி அதனை பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். யாரேனும் விண்ணப்ப தாரியொருவர் தனது அனுமதி அட்டையினை ஒப்படைக்காமல் இருந்தாலோ அல்லது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு பரீட்சை நிலையத்திற்கு சென்று பரீட்சைக்குத் தோற்றியிருந்தாலோ அவருடைய பரீட்சார்த்தத் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரர்களின் கையொப்பமானது உரிய அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபரினால்/ அரபுக் கல்லூரி அதிபரினால் அல்லது கிராம அலுவலரால் சான்றுப் படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்கப் பெறா விட்டால், அஹதிய்யா பாடசாலை அதிபர்/ அரபுக் கல்லூரி அதிபர் மூலம் அது பற்றி தாமதமின்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறியத்தரவும். அத்தகைய அனைத்து சந்தர்ப்பத்திலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் :

1. பரீட்சையின் பெயர்
2. அஹதிய்யா பாடசாலையின் / அரபுக் கல்லூரியின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்
3. அஹதிய்யா தஹம் பாடசாலையின் / அரபுக் கல்லூரியின் முகவரி
4. அஹதிய்யா தஹம் பாடசாலையின் / அரபுக் கல்லூரியின் கணினி இலக்கம்
5. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்
6. விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/ நகரம்
7. விண்ணப்பப்படிவம் தபாலிடப்பட்ட தபால் நிலையம்
8. விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலிடப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி
9. பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதன் பற்றுச்சீட்டின் பிரதி

08. **ஆள் அடையாளம் :**

பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை நிலையத்துக்குள் தாம் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும்

பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க முடியும் :

- தேசிய ஆளடையாள அட்டை ;
- செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைத்துக் கொள்ளாதவாறு மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தாமையினை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை நிலையத் திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணபதாரர்கள் பரீட்சை நிலையத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட்ட நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அவ்விடத்தில் இருந்து வெளியேறும் வரை பரீட்சார்த்திகளை இனங்காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகள் மறைக்கப்படாதவாறு இருத்தல் வேண்டும்.

09. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சட்டத் திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கட்டுப் படுதல் வேண்டும். அந்தச் சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் தண்டனைகளுக்கு அப்பரீட்சார்த்தி ஆளாக வேண்டிய நிலை ஏற்படும்.

10. **சித்தியடைந்தமையைத் தீர்மானித்தலும் பரீட்சைப் பெறுபேறு வெளியிடுதலும்:**

இப்பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை நான்கு (04) ஆவதோடு, பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் முழுமையான சித்தியைப் பெறுவதற்கு அப்பாடங்கள் நான்கிலும் சித்தியடைய வேண்டும். எவ்வாறாயினும் ஒரே முறையில் உரிய பாடங்கள் நான்கில் ஏதாவது ஒரு பாடத்தில் சித்தியடையவில்லை எனின் அது நூன சித்தியாகக் கொள்ளப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து அடுத்துவரும் இரண்டு (02) பரீட்சை வருடங்களுக்குள் நூன சித்தி பெற்ற பாடத்திற்காக மீண்டும் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடையாத நூன சித்தியினை பூரத்தி செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு நூன சித்தியினைப் பெற்ற மாணவர்கள் நூன சித்தியினை பூரணப்படுத்தும் போது சித்தியடையாத பாடத்திற்கு மாத்திரமே பரீட்சைக்கு தோற்ற அனுமதி வழங்கப்படும்.

10.1 ஒவ்வொரு பாடத்திற்குமான வினாத்தாள்களுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதோடு சித்தியடையும் தரங்களுக்குரிய புள்ளி அளவுகளும் குறியீடுகளும் கீழே தரப்பட்டுள்ளன:

| *புள்ளி அளவு* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

10.2 விண்ணப்பதாரர்களின் பெறுபேற்று அட்டவணை, உரிய அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபருக்கு/ அரபுக் கல்லூரி அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10.3 பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

11. **சான்றிதழ் :**

இப்பரீட்சையில் சித்திபெறும் அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபருக்கு/ அரபுக் கல்லூரி அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சையில் சித்தியெய்தி சான்றிதழ் கிடைக்கப்பெறாத யாரேனும் பரீட்சார்த்திகள் இருப்பின், அது தொடர்பாக அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபர் ஊடாக அல்லது அரபுக் கல்லூரி அதிபர் ஊடாக “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் பெறுபேற்றுக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை” எனும் முகவரிக்கு கடிதம் மூலம் தெரிவிக்க முடியும்.

12. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல் :**

அஹதிய்யா பாடசாலை அதிபரின் அல்லது அரபுக் கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க மாத்திரமே விடைத்தாள்கள் மீள் பரிசீலனைக்காக இடமளிக்கப் படும். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப் படும் மாதிரிப் படிவத்தின் மூலம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக் காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான கட்டணம் காலத்துக்கு காலம் மாறுபடுவதனால் அது பற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும். எக் காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத்தாள்களை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது.

13. **பாடத்திட்டம்** :

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அஹதிய்யா தஹம் பாடசாலை இறுதிச் சான்றிழ்ப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் உப அட்டவணை - 02 இன் மூலம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

14. **மாதிரி வினாப்பத்திரம்** :

மாதிரி வினாத்தாள்கள் தொடர்பாக "பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 180, ரீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10." என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 011-2667909 /011-2669994 எனும் தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளலாம்.

15. இந்த ஒழுங்குகள் மற்றும் பாடத்திட்டங்கள் ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள விதிகளின்படி செயற்பட அனைத்து விண்ணப்பதாரர்களும் கட்டுப்படுவதோடு இந்நிபந்தனைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தேவைக்கேற்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவுறுத்தல்களில் மொழி மூலங்களில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை காணப்படின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே,
பரீட்சை ஆரைணயாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல,
2026, யூலை 24.

**உப அட்டவணை - 01**

| *மாவட்ட இலக்கமும் மாவட்டமும்* | *நகர இலக்கம்* | *நகரம்* |
|---|---|---|
| 01. கொழும்பு | 101 | மருதானை |
| | 102 | பம்பலப்பிட்டி |
| 02. கம்பஹா | 201 | நீர்கொழும்பு |
| | 202 | நிட்டம்புவ |
| 03. களுத்துறை | 301 | களுத்துறை |
| | 302 | பாணந்துறை |
| | 303 | அளுத்கம |
| 04. கண்டி | 401 | கண்டி |
| | 402 | நாவலப்பிட்டி |
| 05. மாத்தளை | 501 | மாத்தளை |
| 06. நுவரெலியா | 601 | நுவரெலியா |
| | 602 | ஹட்டன் |
| 07. காலி | 701 | காலி |
| 08. மாத்தறை | 801 | மாத்தறை |
| | 802 | அக்குரஸ்ஸ |
| 09 . ஹம்பாந்தோட்டை | 901 | அம்பாந்தோட்டை |
| | 902 | வீரகெடிய |
| 10. யாழ்ப்பாணம் | 1001 | யாழ்ப்பாணம் |

| *மாவட்ட இலக்கமும் மாவட்டமும்* | *நகர இலக்கம்* | *நகரம்* |
|---|---|---|
| 11. மன்னார் | 1101 | மன்னார் |
| 12. வவுனியா | 1201 | வவுனியா |
| 13. முல்லைத்தீவு | 1301 | முல்லைத்தீவு |
| 14. கிளிநொச்சி | 1401 | கிளிநொச்சி |
| 15. மட்டக்களப்பு | 1501 | காத்தான்குடி |
| | 1502 | வாழைச்சேனை |
| | 1503 | ஏறாவூர் |
| 16 அம்பாறை | 1601 | அம்பாறை |
| | 1602 | சம்மாந்துறை |
| | 1603 | இறக்காமம் |
| | 1604 | பொத்துவில் |
| | 1605 | கல்முனை |
| | 1606 | நிந்தவூர் |
| | 1607 | அக்கரைப்பற்று |
| 17. திருகோணமலை | 1701 | திருகோணமலை |
| | 1702 | மூதூர் |
| | 1703 | கிண்ணியா |
| 18. குருநாகல் | 1801 | குருநாகல் |
| | 1802 | நாரம்மல |
| | 1803 | குளியாப்பிட்டி |
| | 1804 | சியம்பலாகஸ்கொடுவ |
| 19. புத்தளம் | 1901 | புத்தளம் |
| | 1902 | மதுரங்குளி |
| | 1903 | நுரைச்சோலை |
| | 1904 | கனமுலை |
| | 1905 | சிலாபம் |
| 20. அநுராதபுரம் | 2001 | அநுராதபுரம் |
| | 2002 | கெகிராவ |
| | 2003 | ஹொரவ்பொத்தானை |
| 21. பொலன்னறுவை | 2101 | பொலன்னறுவை |
| | 2102 | கதுருவெல |
| 22. பதுளை | 2201 | பதுளை |
| | 2202 | ஹாலிஎல |
| | 2203 | பண்டாரவளை |
| | 2204 | வெலிமடை |
| 23. மொணராகலை | 2301 | பிபில |
| 24. இரத்தினபுரி | 2401 | இரத்தினபுரி |
| | 2402 | எஹளியகொட |
| | 2403 | இரக்வான |
| 25. கேகாலை | 2501 | மாவனல்லை |
| | 2502 | வரகாபொல |
| | 2503 | கன்னன்தொட |

**உப அட்டவணை - 02**

**இப்பரீட்சையானது மூன்று (03) மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு (04) வினாப்பத்திரங்களைக் கொண்டது.**

**முதலாம் வினாப்பத்திரம்**

**01. இஸ்லாமிய கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும் (அல் அகீதா வஷ்ஷரீஆ) அரபு மொழியும்.**

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம் இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள்

- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
- ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா, முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும், ஷிர்க்கும்

- ஈமானும், குப்றும்
- ரித்தத், நிபாக்
- அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
- சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர் ஆனின் பயன்பாடு
- ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
- சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா வின் பயன்பாடு
- ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ் களின் பங்களிப்புகளும்
- இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
- துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
- துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
- பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அறபு மொழி

- உறுப்பமைய எழுதுதல்
- சிறு வாக்கியங்களை எழுதுதல்
- இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
- முக்கியமான ஸுறாக்களையும், ஆயத்துக் களையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

**இரண்டாம் வினாப்பத்திரம்**

**02. இஸ்லாமிய சட்டநெறி (அல் பிக்ஹுல் இஸ்லாம்)**

2.1 இபாதத் பற்றிய விளக்கம்

- இபாதத்தின் பிரிவுகள்
- தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும்

- நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
- நீரும் அதன் வகைகளும்
- வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத்

- முக்கியத்துவம்
- விதி முறைகள்
- திரட்டலும் விநியோகமும்
- ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும், செல்வப் பங்கீடும்

2.4 நோன்பு

- முக்கியத்துவம்
- விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ்

- முக்கியத்துவம்
- விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ் : நிறைவேற்றும் முறை

- பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
- பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தில் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்

- உழைப்பின் முக்கியத்துவம்
- பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ-ம்: இரவல், வாடகை)
- வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை

- நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
- குடும்ப வாழ்வு
- கணவன்-மனைவி
- பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்
- தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்

- ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

**மூன்றாவது வினாப்பத்திரம்**

**03. இஸ்லாமிய வரலாறு (அஸ்ஸீரா வத்தாரிக்குல் இஸ்லாம்)**

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்

- நுபுவ்வத்திற்கு முந்திய வாழ்க்கை
  * குடும்பம், பரம்பரை
  * இளமைப்பருவம்
  * நற்குணம்
  * திருமணம்
- நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  * நுபுவ்வத் கிடைத்தல்
  * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  * மிஃராஜ்
  * ஹிஜ்ரத்
- மதீனா வாழ்க்கை
  * சமூக அரசியல் செயற்பாடு
  * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்
- ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
- குலபாஉர்ராஷிதூன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
- உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
- பைத்துல் முகத்தஸ் - வரலாறு
- இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
- முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
- பின்வருவோர் பற்றிய வரலாறு
  * இமாம் புகாரி (ரஹ்)
  * இமாம் ஷாபிஈ (றஹ்)
  * இமாம் கஸ்ஸாலி (றஹ்)
  * இமாம் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)
  * இமாம் ஷாதுலி (ரஹ்)

**நான்காவது வினாப்பத்திரம்**

**04. இஸ்லாமிய ஒழுக்கவியல் (அல் அஹ்லாக்)**

4.1 **அஹ்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்**

- அக்லாக் பற்றிய விளக்கம்
- ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
- அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
- உளத்தூய்மை (இஹ்லாஸ்)

4.2 **தக்வா**

- வரஉ, ஸுஹ்த்
- முராகபா, முஹாஸபா
- ஷவ்க் (இறையன்பு)

4.3 **ஈகை**

- தியாகம்
- நன்றியுணர்வு
- பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
- பணிவு
- நேரம் பேணுதல்
- அவையவங்களைப் பேணுதல் நாவு, கண், காது, பாலுறுப்பு
- பிறரை மதித்தல்
- நீதியும் நேர்மையும்
- இளைஞர் - யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப்பண்புகள்
- ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

4.4 **இஸ்லாமிய நீதிமுறை**

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## கத்தோலிக்க தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2026

2025 ஆண்டுக்கான கத்தோலிக்க தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அதேவேளை பரீட்சை 2026 ஒக்டோபர் மாதம் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. **பரீட்சை நிலையங்கள் :**

உப அட்டவணை 01 இல் காட்டப்பட்டு;ள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும் ஒரு நகரத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரர்கள் அந்நகரத்துக்கு அருகாமையிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்துக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

03. **மொழி மூலம் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டும் நடைபெறும் ஆனால் ஒரு விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற தான் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரமே அனுமதிக்கப்படும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

04. **தகைமைகள் :**

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்ப தாரர்களும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனும் ஒரு தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

4.1 கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கத்தோலிக்க தஹப் பாடசாலை தரம் 10 இல் சித்தி பெற்று கத்தோலிக்க தஹப் பாடசாலை இறுதியில் சான்றிதழ் வகுப்பில் குறைந்தது ஒரு வருட கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருத்தல் கொண்டிருத்தல்.

4.2 கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் கத்தோலிக்க சமய (கிறிஸ்தவ சமயம் ரோமன் கத்தோலிக்கம்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

4.3 அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் வருடாந்த மறை உபதேசப் பரீட்சையில் 11 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

05. **விண்ணப்பித்தல் :**

5.1 கத்தோலிக்க தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சைக்காக இலந்கைப் பரீட்சைத் திணைக் களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மறைப் பாடசாலைகளுக்கு தேவையான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் தபால் மூலமாக இதுவரையில் அனுப்பி வைக்கப் பட்டுள்ள அதேவேளை www.doenets.lk என்ற இணையத் தளத்தினூடாக தரவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.2 உமது கத்தோலிக்க தஹம் பாடசாலை விண் ணப்பப்படிவங்களை விண்ணப்பிக்கும் புதிய கத்தோலிக்க தஹம் பாடசாலை ஆயின் கிறிஸ்த்தவ மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றிதழின் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப் படல் வேண்டும்.

5.3 யாரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தனிப்பட்ட விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. ஆயினும் பந்தி 4 இல் காணப்படும் தகைமைகள் பெற்றுள்ள யாரேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவாராயின் தமது வதிவிடத்துக்கு அருகாமையில் உள்ள மறைப் பாடசாலை மூலம் ரூபா 200.00 பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணபிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தலகள்; அனைத்தும் மறைப்பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5.4 உரிய மறைப் பாடசாலை மூலம் முன்வைக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவத்தினை இரண்டு பிரதிகளாக பூரணப்படுத்தி மூலப் பிரதியினை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அதேவேளை இரண்டாம் பிரதியினை மறைப் பாடசாலை அதிபர் தன்வசம் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இரண்டிலும் அதிபர் மூலம் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

5.5 விஷேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பதாரராயின் அது தொடர்பாக விண்ணப்பப்படிவத்தில் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டியதோடு அது தொடர்பான மருத்துவ சான்றிதழ்களினது; பிரதிகளுடன் விண்ணப்பப்படிவத்தின் பிரதியும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.6 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 2026.07.24 ஆம் திகதி ஆரம்பமாகி 2026.08.24 ஆம் திகதி முடிவடையும்.

5.7 விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பதாரர்களின் பெயர்களை எழுதும் போது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே எழுதப் படல் வேண்டும். மேலும் தேசிய அடையாள அட்டை இலக்கமும் கட்டாயமாக குறிப்பிடல்படல் வேண்டும். பெறுபேறு வழங்கப்பட்ட பின்னர் பெயர் திருத்தங்களுக்காக கோரிக்கையின் போது அச்சுப்பிழை தவிர்ந்த வேறு எந்தவித கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும் பிழை யின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் இறுதித்தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களும் எந்தவித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.8 பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தாம் வழங்கிய தகவல்கள் சரியானவைதானா என்பதனை தாமாக பரிசீலனை செய்த பின்பே கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறும் வரை சகல பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டை யின் பிரதிகளையும் அறநெறிப் பாடசாலை தலைமையாசிரியர் தம்வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

5.9 விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் தொடர் பாகவும், தகைமை கொண்டுள்ளமை தொடர் பாகவும், விண்ணபப்படிவத்தை உறுதிப் படுத்தும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் உறுதிப்படுத்த அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளப் பட வேண்டும்.

5.10 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலையின் பதிவு இலக்கம், மற்றும் முகவரி என்பன பிழையின்றிக் குறிப்பிடப்படுவதோடு, அறநெறிப் பாடசாலையின் முகவரியில் மாற்றம் இருப்பின் அதனை அறியத் தருவதோடு, அறநெறிப் பாடசாலையின் தலைமையாசிரியருடன் தொடர்பு கொள்ளத்தக்க தொலைபேசி இலக்கமொன்றும்; குறிப்பிடப்பட வேண்டும்.

5.11 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக் கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் அனுப்பப் படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இந்து அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை" என்பதையும் பரீட்சைக்கு தோற்றும் நகரத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.12 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறு தித்தினத்திற்கு / அதற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவம் தொலைதல் அல்லது காணாமல் போதல் மற்றும் தாமதமாக அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பாக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பப் படிவம் முன்வைக்கப்படும் இறுதித்தினம் வரை தாமதப்படுத்துவதற்கான அனைத்துப் பொறுப் பினையும் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர் பொறுப்பேற்க வேண்டும்.

**பரீட்சைக் கட்டணம் :**

இப் பரீட்சைக்குகரிய கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும், முதற்தடவையாக இப்பரீட்சையிற் தோற்றுபவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக்களிக் கப்படும். நூன சித்தி பாடத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

**பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :**

மறைப் பாடசாலை அதிபர்கள் உரிய பரீட்சார்த்தி களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்ட ணத்தை மொத்தமாக அருகாமையிலுள்ள தபாலகத் தில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண் ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச் சீட்டின் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமளிக்கலாம்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய விண்ணப்ப தாரிகள் (தமது மறைப் பாடசாலை அதிபரூடாக) நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் உரிய பணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் மறுபு றத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத் தப்பட்ட கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றப் படவோ அல்லது மீளப்பெறவோ இயலாததாகும்.

07. **பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை:**

சகல பரீட்சைக்கு உள்வாங்கப்பட்டுள்ள அனுமதி அட்டைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்பட்ட மறைப் பாடசாலை அதிபர்கள் / பொறுப்பாசிரியர்களுக்கு வழங்கப்படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தனது கையொப்பம் சான்றுறுதி செய்யப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வை யாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத போது அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும்போது அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து மறைப் பாடசாலை அதிபர் அல்லது கிராமசேவையாளர் மூலம் குறித்த விண் ணப்பதாரியினுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 தினங்களுக்கு முன்னர் அனுமதிஅட்டை கிடைக்காதவிடத்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் இவ்விடயத்தை பரீட் சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப் பட வேண்டும். அத்தகைய எல்லா சந்தர்ப்பத்திலும் கீழ்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

1. பரீட்சையின் பெயர்:
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்
3. அறநெறிப் பாடசாலையின் பாடசாலை இலக்கம் (கணனி இலக்கம்)
4. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்
5. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் /நகரம்:
6. விண்ணப்பங்களைப்; பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்த தபால் நிலையம்
7. விண்ணப்பபடிவம் தபாலில் அனுப்பப்பட்ட பற்றுச்சீட்டு
8. பரீட்சைக் கட்டணத்தின் செலுத்தியிருப்பின் அப்பற்றுச்சீட்டின் பிரதி.

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்திப்படத்தக்கவாறான தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ள வேண்டும். அதற்கென கீழ்க்குறித்த ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியான கடவுச்சீட்டு
- செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் தக்கவாறு, முகம் மற்றும் இரு காதுகளையும் மறைத்துக்கொள்ளாதவாறு மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் எதுவுமின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அங்ஙனம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்தினுள் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார். மேலும், பரீட்சை நிலையத்தினுள் உள்நுழைந்த கணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியே செல்லும்வரை பரீட்சை மேற்பார்வையாளர் பரீட்சார்த்தியை அடையாளங் கண்டு கொள்ளத்தக்கவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைப்பதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

09. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிடும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அந்தச் சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப்படும் தண்டனைகளுக்கு அவர் ஆளாக வேண்டிய நிலை ஏற்படும்.

10. சித்தி பெற்றமையை தீர்மானித்தலும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடலும்:

இந்தப் பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தி பெறும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தி பெற்றதாகக் கருதப் படுவர். ஒரே தடவையில் நான்கு பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூனசித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்துவரும் இரண்டு வருட பரீட்சைகளுக்குள் நூனசித்தி பாடத்திற்கு தோற்றி சித்தி பெற்று நூன சித்தியைப் பூரணப்படுத்த வேண்டும். நூனசித்தி பெற்ற மாணவர்கள் நூனசித்தியைப் பூரணப்படுத்துவதற்காக கட்டாயமாக நூனசித்தி பெற்ற பாடத்தை மாத்திரமே தோற்ற வேண்டும்.

10.1

| *புள்ளிகளின் வீச்சு* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | உயர் திறமை சித்தி | D |

10.2 விண்ணப்பதாரிகளின் பரீட்சை பெறுபேறுகள் உரிய இந்து மறைப் பாடசாலை அதிபர்/பொறுப் பாசிரியருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10.3 பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கருதப்படும்.

11. **சான்றிதழ் :**

இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுகின்ற ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றபோதும் சான்றிதழ் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி ஒருவர், அறநெறிப் பாடசாலை அதிபர் மூலமாக,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனம் சார் பெறுபேறுகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவித்து விபரத் தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

12. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல் :**

மறைப் பாடசாலை அதிபரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத்தாள்கள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மாதிரிப் படிவத்தின் மூலம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடுவதனால், அது பற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத்தாளை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது

13. **பாடத்திட்டம்** :

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங் கமைப்பு செய்யப்பட்டு நடாத்தப்பட இருக்கும் இந்த அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை தொடர்பான பாடத்திட்டம் இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள உப அட்டவணை இல் குறிப்பிடப் பட்டுள்ளது.

14. இந்நிபந்தனைகள் மற்றும் பாடத்திட்டத்திற் குறிப்பிடப் பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்துப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப் பட்டிருக்கும் அதேவேளை, இந்நிபந்தனைகளிற் குறிப் பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

15. தமிழ்மொழி மூலம் மாத்திரமே அறிவுத்தல்கள் வெளி யிடப்படும் அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பத்தரமுல்லை. பெலவத்த,
2026, யூலை மாதம் 24.

**உப அட்டவணை 01**

| *மாவட்ட இலக்கம்* | *மாவட்டம்* | *நகர இலக்கம்* | *நகரம்* |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 101 | கொழும்பு |
| | | 102 | மொரட்டுவ |
| 02 | கம்பஹா | 201 | கம்பஹா |
| | | 202 | நீர்கொழும்பு |
| | | 203 | கந்தானை |
| | | 204 | களனி |
| 03 | களுத்தறை | 301 | களுத்தறை |
| 04 | கண்டி | 401 | கண்டி |
| 05 | மாத்தளை | 501 | மாத்தளை |
| 06 | நுவரெலியா | 601 | நுவரெலியா |
| 07 | காலி | 701 | காலி |
| 08 | மாத்தறை | 801 | மாத்தறை |
| 09 | ஹம்பாந்தோட்டை | 901 | ஹம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் | 1001 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் | 1101 | மன்னார் |

| மாவட்ட இலக்கம் | மாவட்டம் | நகர இலக்கம் | நகரம் |
|---|---|---|---|
| 12 | வவுனியா | 1201 | வவுனியா |
| 13 | முல்லைத்தீவு | 1301 | முல்லைத்தீவு |
| 14 | கிளிநொச்சி | 1401 | கிளிநொச்சி |
| 15 | மட்டக்களப்பு | 1501 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை | 1601 | அம்பாறை |
| 17 | திருகோணமலை | 1701 | திருகோணமலை |
| 18 | குருநாகல் | 1801 | குருநாகல் |
| | | 1802 | குளியாப்பிட்டி |
| 19 | புத்தளம் | 1901 | புத்தளம் |
| | | 1902 | சிலாபம் |
| | | 1903 | வென்னப்புவ |
| 20 | அநுராதபுரம் | 2001 | அநுராதபுரம் |
| 21 | பொலன்னறுவை | 2101 | பொலன்னறுவை |
| 22 | பதுளை | 2201 | பதுளை |
| 23 | மொனராகலை | 2301 | மொனராகலை |
| 24 | இரத்தினபுரி | 2401 | இரத்தினபுரி |
| 25 | கேகாலை | 2501 | கேகாலை |

**உப அட்டவணை 02**

**பரீட்சைக்கான பாடத்திட்டம்**

இப் பரீட்சை மூன்று மணித்தியாலங்கள் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

**வினாப்பத்திரம் - 01**

**கத்ததோலிக்க விசுவாசம்**

(அ) அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணத்தில் உள்ள அடிப்படையில் படிப்பினைகளை அடிப் படையாகக் கொண்டுள்ளது.

- இறைவன்
  - உலகின் ஆரம்பம்
  - படைப்பைப் பாதுகாத்தல் (தொடக்க நூல் 1,2,3)

- மீட்டர்
  - இயேசு கிறிஸ்து (அருளப்பர் 1 : 1-14)
  - விண்ணரசு படிப்பிணைகள் (மத்தேயு 5,6,7)
  - உவமைகள் (மத்தேயு 13 : 1-52)
  - புதுமைகள் (யோவான் 11 : 38-45 லூக்கா : 8 : 26-39 மாற்கு : 2 : 1-12, 4 : 35-41)

- தூய ஆவியின் செயற்பாடு
  - (யோவான் : 7 : 37-39, 14 : 15-31,16 : 5-15)
  - (1 கொரிந்தியர் 12 : 4-11)

- கிறிஸ்தவ சபை
  - ஏகம், பரிசுத்தம்
  - கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
  - திருச்சபை கிறிஸ்துவின் சரீரம்

    (ரோமையர் - 12 : 4-1)
    (1 கொரிந்தியர் 12 : 12-31)
  - திருச்சபையின் நிருவாகம்
  - குருத்துவப் பணி
  - துறவறப் பணி
  - பொது நிலையினர் பணி

- மீளுருவாக்கப் பணி
  - இறுதித் தீர்ப்பு
  - புதிய வானம் புதிய பூமி (திரவெளிப்பாடு 21 : 1-4)

**வினாப்பத்திரம் - 02**

**கத்ததோலிக்க வாழ்வு**

(ஆ) கத்தோலிக்க வாழ்வு வாழ பெற்றுக் கொள்ள திருவழிப்பாடு

* திருப்பலி மற்றும் சடங்குகள்
* பாஸ்கா மறைபொருள்
* தேவ வரப்பிரசாதங்கள்
* அருட்சாதனங்கள் (பொது இயல்பு)

**புதுமுக அருளடையாளங்கள்**

- திருமுழுக்கு
- உறுதிப்பூசுதல்
- திவ்விய நற்கருணை

**குணமளிக்கும் அருளடையாளங்கள்**

- ஒப்புரவு
- நோயில் பூசுதல்

**சமூகப் பணிக்கான அருளடையாளங்கள்**

- திருமணம்
- குருத்துவம்

**வினாப்பத்திரம் - 03**

**கத்ததோலிக்க விழுமியங்கள்**

(இ) பத்து கற்பனைகள் மற்றும் அன்புக் கட்டளைகள்

இயேசுவின் 2 பிரதான கட்டளைகள் பத்துக் கட்டளைகளை முழுமைப்படுத்திய யேசு (மத்தேயு 5 : 21-47)

மலைப்பொழிவு (லூக்கா 6 : 17 - 49)

- புத்தியும் சுதந்திரமும்
- நற்குணங்கள்
- மனசாட்சி
- இறைவனை அன்பு செய்தல் (கட்டளைகள் 1-3)
- பிறரை அன்பு செய்தல் (4-10)
- பத்துக் கற்பனையில் அடங்கியுள்ள நற்பண்புகள்
- கத்தோலிக்க பண்புகள்

**வினாப்பத்திரம் - 04**

(ஈ) இறையன்பை கட்டி எழுப்பக்கூடிய செபங்கள்

- பழைய ஏறபாட்டில் செபம்
  - ஆபிரகாம்
  - மோயீசன்
- புதிய ஏற்பாட்டில் செபம்
  - கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
  - செபம் பற்றிய விசேட படிப்பினைகள் (லூக் 11 : 1-3)
- திருச்சபை வாழ்கைக்குள் செபம்
  - வாழ்த்துதல்
  - மகிழ்ச்சி
  - புகழ்ச்சி
  - நன்றி
  - விண்ணப்பம்
  - மத்தியஸ்தர்
  - தியானம்
- யேசு கற்பித்த செபமும் ஏழு விண்ணப்பங்களும்;
  - உமது நாமம் போற்றப் பெறுக
  - உமது அரசு வருக
  - உமது சித்தம் விண்ணுலகில் செயற்பாடுவது போல இம் மண்ணுலகிலும் செயற்படுவதாக
  - எங்கள் அன்றாட உணவை எங்களுக்குத் தந்தருளும்
  - எங்களுக்குத் தீமை செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களையும் மன்னித்தருளும்
  - சோதனைகளில் எங்களை விழ விடாதேயும்
  - தீமையில் இருந்து காத்தருளும்
- விசேட பக்தி முயற்சிகள்
  - செபமாலை
  - நவநாள்
  - திருமணித்தியாலம்

பரசீலிக்க வேண்ணடிய புத்தகங்கள்

- புதிய கத்தோலிக்க வேதநூல்
- விவிலியம், பெரியகுறிப்பிடம்
- 2 ஆம் வத்திக்கான் சங் ஏடு
  * திருவழிபாடு
  * இன்றைய உலகில் திருச்சபை
  * கிறிஸ்துவின் சபை
  * பொது நிலையினர் அப்போஸ்தலிக்க சேவை

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026

1.0 மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் சம்பளக் கொடுப்பனவுகள், தரமுயர்த்தல்கள் மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உள்ளிட்ட அனைத்து தாபன ரீதியான விவகாரங்களும், 2014.10.23 ஆம் திகதியிடப்பட்ட 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.07.08 ஆம் திகதியிடப்பட்ட 2444/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.06.19 ஆம் திகதியிடப்பட்ட 2493/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் நான்காவது திருத்தம் ஆகியவற்றின் விதிகளுக்கு இணங்க, I ஆம் வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் 2026, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என்றும்; இக்குறிப்பிட்ட பரீட்சைக்கு பிரிவெனாக்களில் கடமையாற்றும் பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சையானது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரமே நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பித்த நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப் பிக்காதவிடத்து, அவ்விண்ணப்பதாரர்கள் தங்களது இரண்டாவது விருப்பத் தெரிவாகக் குறிப்பிட்டுள்ள நகரத்தில் அல்லது அதற்கு அருகிலுள்ள வேறொரு நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையமொன்றுக்கு வழிப்படுத்தப்படுவார்கள். மேலும், முன்மொழியப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அவற்றில் பெரும்பாலானவற்றில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட் சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doents.lk என்ற இணையத் தளத்தில் "Our Services" என்பதன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams / E.B. Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறைமையூடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026, யூலை மாதம் 13 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, யூலை மாதம் 31 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து இரண்டு (02) அச்சிடப் பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்விரண்டு பிரதிகளினதும் உரிய பகுதிகளைக் கையெழுத்தினால் பூர்த்தி செய்து, விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் உறுதிப்படுத்தி, வலயக் கல்விப் பணிப்பாளரின் சான்றுப்படுத்துகையுடன் அதில் ஒரு பிரதியைத் தனது தனிப்பட்ட கோவையில் சேர்க்க வேண்டும். மற்றைய பிரதியைத் தேவைப்படும் போது சமர்ப்பிப்பதற்காகத் தன்வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலைக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

2.0

I. இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும்.

II. பரீட்சார்த்தி தகுதியைப் பெற்றுக்கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த விதிகளினை மீறும் பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

III. இப்பரீட்சைக்கு பிரிவெனாக்களில் கடமையாற்றும் பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

IV. இப்பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் தோற்றும் பட்சத்தில், அது குறித்து விண்ணப்பப் படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பான மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

3.0 **பரீட்சைக் கட்டணம்:**

இந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை யானது முதற்தடவையாக நடாத்தப்படுவதனால் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

4.0 **விண்ணப்பப்படிவங்களை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல்:**

நிகழ்நிலை (Online) மூலமான பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ் நிலை ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா / இல்லையா என்பது, முறை மைக்குள் பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை ஊடாக விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள்ளே தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப பிரதானி திருப்தியடையக்கூடிய வகையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அதேபோன்று, பரீட்சார்த்திகள் தங்களது அடை யாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் எவற்றையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த தருணத்திலிருந்து பரீட்சை நிறைவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

6.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண் ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண் ணப்பதாரர்களுக்கு மாத்திரம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலமாக மாத்திரமே வெளியிடப்படும்.

பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டப பிரதானியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட உடனே, இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது குறித்த விபரம் இணையதள அறிவித்தல் மூலமாக அல்லது விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாக அறியத்தரப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன ரீதியான பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கைக் கடிதத்தை, இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதி ஒன்றைத் தன்வசம் வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களை

மேற்கொள்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.0 பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வெளியிடப்பட்டமையானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது அதற்குரிய வினைத் திறன் காண் தடைதாண்டலுக்குரிய தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஒரு அங்கீகாரமாகக் கருதப்படலாகாது.

8.0 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண் ணப்பதாரரின் கையொப்பமானது, வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றளிக்கப் படல் வேண்டும்.

9.0 பரீட்சை விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப் பட்ட அனுமதி அட்டைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில், திணைக்களத் தலைவர்களினால் தேவை யானவாறு கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். இதற்கான பிரயாணக் கட்டணங்கள் வழங்கப்பட மாட்டாது.

11.0 இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளில் மாத்திரமே நடாத்தப்படும். அவற்றில் தங்களது நியமனப் பாடத்திற்குரிய மொழிமூலத்தில் அல்லது ஏதேனும் ஒரு அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றுகின்ற ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒரே மொழிமூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12.0 பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீ கரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீ கரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீ கரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களில் தரம் 3 வகுப்பு II, தரம் 3 வகுப்பு I மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமானி பட்டத் தகைமையின் அடிப்படையில் தரம் 2-II இற்கு ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள், உரிய தரத்திற்கு நியமிக்கப்பட்டு மூன்று (3) ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர் I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.0 **பரீட்சை நடைமுறை :**

13.1 **வினாக்களின் கட்டமைப்பு**

கல்வி அமைச்சினால் e-thaksalawa உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள, கீழே 13.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுயகற்றல் இதவடிவங்கள் (மொடியூல்) தொடர்பான பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இப் பரீட்சை நடாத்தப்படும். இவ்வினைத் திறன்காண் தடைத்தாண்டலுக்குரிய எழுத்துப் பரீட்சையானது, தொடர்புடைய அனைத்து இதவடிவங்களையும் (மொடியூல்) உள்ளடக்கும் வகையில் பின்வருமாறு தயாரிக்கப்படும்.

| *கட்ட மைப்பு* | *வினாத் தாளின் அமைப்பு* | *காலம்* | *புள்ளி கள்* |
|---|---|---|---|
| I ஆம் வினாத் தாள் | பல்தேர்வு | 01 மணித்தி யாலம் | 40 |
| II ஆம் வினாத் தாள் | கட்டமைக் கப்பட்ட வினாக்கள் அல்லது பகுதியள வில் கட்ட மைக்கப் பட்ட வினாக்கள் | 02 மணித்தி யாலங்கள் | 60 |

குறிப்பு 1: I வது ஆனது வினாத்தாள் ஆக விடயம்சார் வினாத்தாள் I வழங்கப்படும் என்பதுடன், அது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக அமைந் திருக்கும், அத்துடன், II ஆவது வினாத்தாள் ஆக விடயம்சார் அறிவு வினாத்தாள் II வழங்கப்படும். அது 04 பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமைந் திருக்கும். அவ்விரண்டு வினாத்தாள் களினதும் உள்ளடங்கியுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும்.

13.2 **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினைத் திறன் காண் தடை தாண்டல்* | *தொடர்புடைய இதவடிவம்* |
|---|---|
| I வது வினைத் திறன் காண் தடை தாண்டல் | 1. ஆசிரியர் தேர்ச்சிச் சட்டகம் மற்றும் ஆசிரியரின் தொழில் வாண்மைத் துவம் |
| | 2. கற்பித்தல் செயன்முறை |
| | 3. கல்விக்கான டிஜிட்டல் தொழில்நுட்பம் |
| | 4. கல்வி தொடர்பான சட்டம் |

குறிப்பு 2: சித்தியடைவதற்காக மேலே 13.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.

14.0 **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்** :

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் நடைமுறை பின்வருமாறு அமையும்.

I. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்ப தாரர்களினதும் பெறுபேறுகள், மாகாண அடிப் படையில் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இரண்டு பிரதி களாகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப் படும்.

II. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச் சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் அக்குறிப்பிட்ட பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங் களின் இரண்டு பிரதிகளில் ஒரு பிரதியானது உரிய ஆசிரியர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் மாகாணக் கல்வி அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

III. அதேபோன்று, பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங் கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாட சாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நியமனங்களை நிரந்தர மாக்குவதற்கும் தரம் உயர்த்துவதற்கும் உரியதான இந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகளை, விண்ணப்பதாரர்களும் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வாய்ப்பு பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும். அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் பெறுபேற்றுப் பத்திரத்தை விண்ணப்பதாரர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ப துடன், அப் பெறுபேற்றுப் பத்திரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வி அமைச்சு அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரிட மிருந்து உறுதிப்படுத்திக் கொண்டு, உரிய உத்தி யோகத்தரின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும்.

IV. அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில், மாகாண/வலயக் கல்வி அதி காரிகள் உரிய ஆசிரியர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குவதற்கும் மற்றும் தரம் உயர்த்து வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்

V. பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்..

15.0 இந்த பரீட்சை அறிவித்தலின் விதிமுறைகளில் குறிப் பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக, கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

16.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளி யிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங் களிடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்த மின்மைகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சு.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
“இசுருபாய”
பத்தரமுல்ல,
2026, யூன் 20.

**அட்டவணை I**

| *மாவட்டம்/ நகரம்* | *மாவட்டம்/ நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

07-429

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

**ஆங்கிலப் பாடத்துடன், பொதுக் கலைக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த ஆசிரியர்களை அரசாங்கப் பல்கலைக்கழங்களுக்கு அனுமதித்தல - 2025/2026 கல்வியாண்டு**

2025/2026 கல்வியாண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ள பின்வரும் பாடநெறிகளைத் தொடர்வதற்காக இலஙகையின் அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கென, ஆங்கிலப் பாடத்துடன் பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/ கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்து, அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. கலைப்பட்டப் பாடநெறி (ஆங்கிலப் பாடத்துடன்)

II. விஞ்ஞானமானி பட்டப் பாடநெறி (உயிரியல் விஞ்ஞானம்/பௌதீக விஞ்ஞானம்/பிரயோக விஞ்ஞானம்)

02. விண்ணப்பதாரர்கள் இதற்கெனப் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

I. (அ) கலைப்பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்காக:

2021 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பிந்திய வருடம் ஒன்றில் ஆங்கிலப் பாடத்துடன், பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/ கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்காக :

2021 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பிந்திய வருடம் ஒன்றில் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஆசிரியராக 05 வருடங்கள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், உரிய ஆசிரியர் நியமனம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல்.

III. தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தேசிய கல்வியியல் கல்லூரி, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் பட்டப் பாடநெறிகளைக் கற்பதற்காகப் பதிவு செய்யாதிருத்தல்.

அல்லது

இலங்கை அரசாங்கப் பல்கலைக்கழகம் ஒன்றின் உள்வாரிப் பட்டப் பாடநெறி ஒன்றைத் (கட்டணக் கொடுப்பனவு இன்றி) தொடர் வதற்காக பதிவு செய்யாதிருத்தல்.

IV. ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் உள்ள உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானப் பாடநெறி சம்பந்தமாக இருக்கும் போது, உரிய பாடநெறிக்குத் தகைமை பெறுவதற்காக க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சையில், உரிய பல்கலைக்கழகத்தினால் முன்தேவையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

V. முழுநேரப் பாடநெறிக்காகச் சம்பளத்துடனான கற்கை விடுமுறையைப் பெற்றுக்ெகாள்வதற்கு உரித்துடைய ஆசிரியர் ஒருவராக இருத்தல் வேண்டும். (சம்பளத்துடனான கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்து குறித்து நேர்முகப் பரீட்சையின் போது ஆராயப்படும்.)

03. அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர்/ முகாமையாளரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ் விண்ணப்பப் படிவங்களில் பாடசாலை அதிபர்/ முகாமையாளரால் உரிய ஆசிரியருக்கு கற்கை விடுமுறை வழங்குவதை அங்கீகரிக்க முடியுமா/ முடியாதா என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

04. ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய இரு (02) பிரதிகளாகத் தயாரிக்கப்பட்டு, 2026.08.30 ஆந் திகதிக்கு முன்னர் "கல்விப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக் கிளை, கலவி அமைச்சு, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, இசுருபாய பத்தரமுல்ல" என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில்

அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் 2025/2026 (ஆசிரியர்களுக்காக)" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

05. இந்த அனுமதியின் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது, ஆங்கிலப் பாடத்துடனான பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில்/ கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சையில் அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள், உரிய பாடத்திற்குப் பெற்ற புள்ளிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலாகும்.

06. இப்பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்ததன் பின்னர், இத்தகைமையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர நியமனங்களை வழங்குவது தொடர்பான பொறுப்பினை இவ் அமைச்சு ஏற்காது.

07. விண்ணப்பப்படிவமானது மூன்று மொழிகளிலும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் (www. moe.gov.lk) விசேட அறிவித்தல் பலகையில் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சு.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
“இசுருபாய”
பத்தரமுல்ல,
2026, யூலை 06.

07-348

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் பொதுக்கல்விப் பிரிவின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதியைச் சேர்ந்த உதவி விடுதிக் காப்பாளர் தரம் III இற்குப் பெற்றுக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2026

01. விண்ணப்பப்படிவமானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் "Our Service" இன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/E.B. Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்நிலை (Online) முறைமையூடாக மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026 ஜூலை மாதம் 27 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026 ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

உத்தியோகத்தர்கள் தங்களது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, திறமையின் அடிப்படையில் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையின் பின்னர் உதவி விடுதிக் காப்பாளர் தரம் III பதவிகளுக்காகத் தெரிவு செய்யப்படுவர்.

03. நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் நடை முறைப்படுத்தப்படும் திகதியும் அமைச்சின் செய லாளரினால் தீர்மானிக்கப்படும்.

(அ) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப் படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அமைவாகவும், 2022.12.14 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டும், தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் உதவி விடுதிக் காப்பாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், முதல் நியமனம் பெற்ற சேவை இடத்தில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் கட்டாயமாகச் சேவை செய்தல் வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில், அக்குறிப்பிட்ட காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்றம் செய்ய வேண்டியேற்படின், அதற்கான அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

(இ) இந்நியமனமானது ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நியமனம் பெற்று மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத் திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தி யடைதல் வேண்டும்.

(ஈ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், தாங்கள் தகைமை பெற்ற மொழி மூலத்திற்கு அமைய, 2020.10.16 ஆம் திகதியுடைய பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க, தாங்கள் உரியவாறு அரச கரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

04. 2025.03.25 ஆம் திகதியுடைய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி MN 01-2025 என்ற சம்பளக் குறியீடு இப்பதவிக்கு உரித்தாவதுடன், அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 45,230 - 10x540 - 11x630 - 10x890 - 10x1,190 - 78,360 ஆகும். இச்சம்பளம் 2027.01.01 ஆம் திகதி முதல் தங்களுக்கு உரித்தாகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி முதல் இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் விதிகளுக்கு இணங்க தங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

05. இப்பதவியானது நிரந்தரமான மற்றும் ஓய்வூதியத்துடன் கூடியதாகும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங் கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு இது உட்பட்டதாகும்.)

06. **பதவிக்குரிய கடமைகள் மற்றும் பொறுப்புகள்:**

I. விடுதி மாணவர்களின் ஒழுக்கம், பாதுகாப்பு, நலன்புரி மற்றும் உணவு வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு செல்லலும், அப்பணிகளை நிறைவேற்றும் போது விடுதிக் காப்பாளருக்கு ஆதரவு வழங்குதலும், விடுதி மாணவ மாணவிகளின் நலன் பேணல், விடுதி மாணவ மாணவிகளின் பாதுகாவலராகச் செயற்படுதல், ஒழுக்கத்தைப் பேணுதல், உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான ஏடுகள் மற்றும் ஆவணங்களைப் பேணுதல், உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், பாதுகாத்தல், சமையலறைக்கு விநியோகித்தல் போன்ற பணிகள், உணவு சமைப்பது குறித்துப் பரிசீலித்தல், சமையலறை உபகரணங்களின் தூய்மை, விடுதியினைத் தூய்மையாக வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், விடுதி மாணவர்களின் பாதுகாப்பு, நோய்வாய்ப்பட்ட மாணவர்கள் தொடர்பான பணிகள், அரசாங்கத்திற்கும் மாணவர்களுக்கும் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாப்பது தொடர்பான பணிகள், தூய்மையைப் பேணுவது தொடர்பான பணிகள், நோய்வாய்ப்பட்ட மாணவர்கள் குறித்துக் கண்டறிதல், உணவு மற்றும் பானங்களைத் தயாரிப்பது தொடர்பான பணிகள், உணவு உண்ணும் நேரங்களைக் மேற்பார்வை செய்தல், விடுதிகளுக்கான நீர், மின்சாரம் ஆகியவற்றை முறையாக வழங்குவது தொடர்பான பணிகள், விடுதிகளில் தங்குபவர்கள் விடுதியை விட்டு வெளியேறுதல் மற்றும் வருகை தருதல் போன்றவற்றுடன் தொடர்புடைய கடமைகள்.

II. பதவிக்கு இணங்க நிறுவனத் தலைவர்களினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

07. **தகைமைகள்:**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகளில் பணிபுரியும் ஆரம்ப நிலை தொழில்நுட்பம் சாரா மற்றும் ஆரம்ப நிலை அரைத் தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த பதவியணி உத்தியோகத்தர்கள், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் உதவி விடுதிக் காப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான,

(அ) **கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் தாய்மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்குத் திறமைச் சித்தி உள்ளடங்கலாக, ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) **அனுபவம்:**

குறிப்பிட்ட திகதிக்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் மத்திய நிலையங்கள் உள்ளிட்ட பொதுக் கல்விப்

பிரிவைச் சேர்ந்த நிறுவனங்களில் ஆரம்ப நிலை சேவை வகுதிக்குரிய நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) **ஏனைய தகைமைகள்**:

I. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் மத்திய நிலையங்கள் உள்ளிட்ட பொதுக் கல்விப் பிரிவைச் சேர்ந்த நிறுவனங்களில் ஆரம்பநிலை சேவை வகுதிக்குரிய நிரந்தரப் பதவியொன்றை வகித்தல் வேண்டும் என்பதுடன், அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுவதற்கு முன்னர் சேவை செய்துள்ள தற்காலிக/ அமைய/ஒப்பந்த அடிப்படையிலான சேவைக் காலப் பகுதிகளோ அல்லது ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான ஒரு நிபந்தனையாகப் பூர்த்தி செய்துள்ள பயிற்சிக் காலப் பகுதிகளோ கணிப்பீட்டில் கருத்தில் கொள்ளப் படமாட்டாது.

III. தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய திகதிக்கு முந்தைய 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க, ஒழுக்காற்றுத் தண்டனைகள் எதற்கும் உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

V. குறிப்பிட்ட திகதிக்கு உரிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய் திருத்தல் வேண்டும்.

VI. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்வதற்கும், இப்பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான மனநிலை மற்றும் உடற் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அதிகபட்ச வயது எல்லை எதுவும் பொருந்தாது.

08. பரீட்சை நடைமுறை- இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தனக்குரிய ஒரு மொழி மூலத்தைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அதே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணபித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும்.

09. மதிப்பீட்டுச் செயன்முறை

| மதிப்பீட்டுச் செயன்முறை | மொத்தப் புள்ளிகள் |
|---|---|
| பொது அறிவு (எழுத்துப் பரீட்சை) | 100 (காலம் 01 மணித்தியாலம்) |
| உளச்சார்பு (எழுத்துப் பரீட்சை) | 100 (காலம் 01 மணித்தியாலம்) |
| தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை | 50 |

I **பொது அறிவு (காலம்: 01 மணித்தியாலம், புள்ளிகள்: 100)**

பதவிக்குரிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் நிறுவனத் தலைவர்களினால் ஒப்படைக் கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்று வதற்குத் தேவையான பொது அறிவைப் பரீட்சிப் பதற்காக தயாரிக்கப்படும் ஒரு பல்தேர்வு வினாத் தாளாகும்.

II **உளச்சார்பு பரீட்சை (காலம்: 01 மணித்தியாலம், புள்ளிகள்: 100)**

விண்ணபதாரர்களின் எண் திறமை, தர்க்க அறிவு மற்றும் பொது நுண்ணறிவை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒரு பல்தேர்வு வினாத்தாளாகும்.

III **தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை (புள்ளிகள்: 50)**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையினூடாக, இங்கு 10 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான துறைகளின் கீழ் புள்ளிகள் வழங்குதல் இடம்பெறும். புள்ளிகள் வழங்குவதற்காகக் கருதப்படும் தகைமைகள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இதன் போது வேண்டுமென்றே பொய்யான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை கண்டறியப்படின், அரசாங்க சேவை ஆணைக் குழுவின் அறிவுறுத்தல் களுக்கு உட்பட்டு விண்ணப்ப தாரர்களுக்கும் அவ்விண்ணப்பங்களை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனங்களைப் பெறுவதற்குத் தகைமை பெறுவதாயின், பொது அறிவு மற்றும் உளச்சார்பு பரீட்சை ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றுச் சித்தியடைதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையின் திறமை வரிசைக்கு அமைய, நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கு எண்ணிக்கையானோர் தகைமை மதிப்பீட்டு

நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர். (எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளோ அல்லது திறமை வரிசையோ தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை சபைக்கு வழங்கப்பட மாட்டாது). அதற்கமைய, நேர்முகப்பரீட்சை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன், அடிப்படைத் தகைமைகளும் பரிசீலிக்கப்படும். எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் திறமை நிலை தீர்மானிக்கப்படும்.

10. **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக, உதவி விடுதிக் காப்பாளர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை - புள்ளிகள் வழங்கும் நடைமுறை - 2025**

| *வழங்கப்படும் பிரதான துறை* | *புள்ளி வழங்கப்படும் விதம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | |
|---|---|---|---|
| 01 . மேலதிகக் கல்வித் தகைமைகள்<br>i க.பொ.த (சாதாரண தரம்) | • விசேட திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• அதி திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம்<br>• திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளிகள் வீதம்<br>(கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு விசேட சித்தி (C) பெற்றிருப்பதற்கு மேலதிகமா) | 10 | 15 |
| ii . க.பொ.த (உயர் தரம்) | • விசேட திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• அதி திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம்<br>• திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளிகள் வீதம் | 5 | |
| iii . பட்டங்கள் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல். | 15 | |
| 02. மேலதிகச் சேவை அனுபவம் | 05 வருடங்களின் பின்னர் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு வருடத்திற்கும் 02 புள்ளிகள் வீதம். | 15 | 15 |
| 03. கணினித் திறன்<br>• அரசாங்கப் பதிவு இலக்கம் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்காவிடின், அது அரசாங்கத்தில் பதிவுசெய்யப் பட்ட ஒரு நிறுவனம் என்பதை உறுதிப்படுத்துவதற்காக உரிய நிறுவனத்திடமிருந்து எழுத்துமூல ஆவணத்தைப் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். | அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கணினித் துறை சார்ந்த டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ். | 3 | 5 |
| | அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணினித் துறை சார்ந்த சான்றிதழ் பாடநெறி ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல். | 2 | |

| *வழங்கப்படும் பிரதான துறை* | *புள்ளி வழங்கப்படும் விதம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | |
|---|---|---|---|
| 04. தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழி தவிர்ந்த வேறு மொழியொன்றில் உள்ள தேர்ச்சி (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) | ஆங்கிலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு மொழி தொடர்பாகக் குறைந்தபட்சம் ஒரு டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல். | 5 | 5 |
| | க.பொ.த. (உயர் தரம்) பாடமொன்றாக ஆங்கிலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு மொழியைக் கற்றிருத்தல். (01 இன் கீழ் புள்ளிகள் வழங்கப்பட்டிருப்பின், இதற்காகக் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.) | 2 | |
| 05. நிறுவனத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட பங்களிப்பு | பாராட்டு கடிதங்கள்- ஒரு கடிதத்திற்கு 2.5 புள்ளிகள் வீதம்<br>• நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | 5 | 5 |
| | • கௌரவிப்புக் கடிதம் – ஒரு கடிதத்திற்கு ஒரு புள்ளி வீதம்<br>• நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | 5 | |
| 06. நேர்முகப்பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | ஆளுமை | 3 | 5 |
| | தொடர்பாடல் திறன்கள் | 2 | |
| | மொழியைக் கையாளுதல் | 1 | |

(அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

<u>குறிப்பு 1</u>

சான்றிதழை வழங்கும் நிறுவனத்தின் அரசாங்கப் பதிவு இலக்கம் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்காவிடின், அது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனம் என்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பதிவு இலக்கத்தைக் கொண்ட எழுத்துமூல உறுதிப்படுத்தலை உரிய நிறுவனத்திடமிருந்து பெற்றுச் சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

11. **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:**

I. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது மிகவும் அவதானமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சைக்குரிய விதிகளுக்கு அமைய, விண்ணப்பதாரர் எவரேனும் இதற்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கண்டறியப்படின், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது அதற்குப் பின்னரோ ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவரது விண்ணப்பதாரர் தகுதி இரத்து செய்யப்படலாம்.

II. விண்ணப்பதாரர் ஒருவரினால் வழங்கப்பட்ட தகவல்கள் பின்னர் தவறானவை எனத் தெரியவரின் அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விபரத்தை மறைத்துள்ளார் என வெளிப்படின், அதனைத் தொடர்ந்து அவருக்கு நியமனம் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன், இப்பரீட்சையின் காரணமாக வழங்கப்பட்டிருந்த நியமனத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கம் செய்வதற்கும் அவர் உட்படுவார்.

III. பரீட்சை நிபந்தனைகள்

12. **நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும்.**

விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப் படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / இல்லையா என்பது, நிகழ்நிலை முறைமையினுள் பிரவேசிப்பதற்குப்

பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப் பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது அவ்வறிவுறுத்தல்களைக் கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

13. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை முறைமையினூடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரமே செலுத்த வேண்டும்.

(அ) ஏதேனும் வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

(ஆ) இணையவழி கொடுக்கல் வாங்கல் வசதிகளைக் கொண்ட ஏதேனும் வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)

(இ) இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறைமை/ Flex செயலி மூலம் (Online Banking Method / Flex App of Bank of Ceylon )

(ஈ) இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளை மூலம் ( Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

மேற்குறிப்பிட்ட முறைகளின் கீழ் கொடுப்பனவு களை மேற்கொள்ளும் விதம் குறித்த அறிவுறுத் தல்கள், இணையத்தளத்தில் பரீட்சை விபரங் களுக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

14. கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமைக்கான உறுதிப் படுத்தல் குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்குரிய முழுத்தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாகச் செலுத்தப் பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கொடுப்பனவு முறைகளின் ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் தவறுகள் சம்பந்தமாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

15. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்பட மாட்டாது அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்பட மாட்டாது.

16. விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலைகளையும் விண்ணப்பதாரரே எதிர்கொள்ள வேண்டும்.

17. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத் தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரமே பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், இலங்கை பரீட்சைத் திணைக் களத்தினால் அது குறித்த விபரம் இணையத்தள அறிவித்தல் மூலமாகவோ/ விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாகவோ அறிவிக்கப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனசார் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கை கடிதமொன்றை, இணையத்தள அறிவித்தலில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு விபரத்தை உறுதிப் படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஆகிய வற்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும். அனுமதி அட்டையைப் பரிசீலித்துப் பார்த்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ/ நேர்முகப்பரீட்சையின் போதோ திருத்தங்களை மேற்கொள்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் எவையும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

18. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

ஏதேனும் ஓர் அரசாங்க நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர், தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரூடாகவும், அவ்வாறில்லாத ஏனைய விண்ணப்பதாரர்கள், தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி, அரசாங்க அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர உத்தியோகத்தரான பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது ஏனைய சமய வழிபாட்டுத் தலங்களுக்குப் பொறுப்பான அல்லது சமயத் தலைவர்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்து வகிக்கும் ஒருவர் மூலமாகச் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

19. பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உள்ளாக நேரிடும்.

20. அமைச்சின்செயலாளரினால்பெறுபேறுகளைவெளியிடுவதற்குப் பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேறுகள் அறிக்கை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk ஊடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

21. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை முதன் முதலில் அந்த மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் நாளன்று, அங்குள்ள பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி எவரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இந்த வர்த்தமானிப் பத்திரிகையின்ஆரம்பத்தில்பிரசுரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

22. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள்ளே தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

பரீட்சார்த்திகள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடியவாறும்,இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் எதையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தக் கூடியவாறும் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

23. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தப்பாடற்ற தன்மை காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
“இசுருபாய"
பத்தரமுல்ல,
2026.

07-398

## நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிலவுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஒக்டோபர் மாதத்தில் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

❖ விண்ணப்பம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழுள்ள “Online Applications - Recruitment Exams/E.B.Exams” இனூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (Online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2026, யூலை மாதம் 27 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2026, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

❖ ஏற்கனவே, அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதி யொன்றை தமது பிரத்தியேகக் கோவையினுள் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் வழங்குதல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்திய விண்ணப்பப் பிரதியுடன், சேவையை நிரூபிப்பதற்கான கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

❖ விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு இறுதி தினம் வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் சகல வித பாதகமான நிலைமைக்கு விண்ணப்பதாரரே பொறுப்பேற்கவேண்டும்.

1.0 ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள் :

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *ஆட்சேர்க்கும் தரம்* |
|---|---|---|---|
| 1 | படவரைஞர்கள் (Draftsman) | 91 | பயிற்சி தரத்தில் (ஒருவருட பயிற்சிக்காக) |
| 2 | துளையிடல் உதவியாளர்கள் (Drilling Assistant) | 06 | பயிற்சி தரத்தில் (இருவருட பயிற்சிக்காக) |
| 3 | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) (Research Assistant -Gen) | 02 | |
| 4 | சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர் (Civil Eng. Material Surveyor) | 13 | |
| 5 | மண் பட வரையியலாளர் (Soil Cartographer) | 02 | |
| 6 | நீரியல் உதவியாளர்கள் (Hydrological Assistant) | 06 | |
| 7 | நீரியல் வெளிக்கள உதவியளார்கள் (Field Assistant - Hydrology) | 03 | |
| 8 | ஆராய்ச்சி உதியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்) (Research Assistant –Eng.mat) | 03 | |
| 9 | மண் வள அய்வாளர் (Soil Surveyor) | 10 | |
| 10 | ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு) (Research Assistant ) | 03 | |
| 11 | இயந்திரவியல் மேற்பார்வையாளர் (mechanical foreman) | 10 | III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும் இருப்பினும் ஆட்சேர்க்கப்பட்டதுடன் முதல் 06 மாதங்களுக்குள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இயந்திரவியல் வேலைத் தளத்தில் சேவையுடன் பயிற்சியளிக்கப்படும். |

1.1 பதவிக்குரிய கடமைகளின் தன்மை

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வழங்கப்படும் செயற்பாடுகள்* |
|---|---|---|
| 1. | படவரைஞர்கள் | 1) பொறியியல் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் திட்ட வரைப்படம், அடிப்படை வழயலகு (Basic Parameters) படவரைபுகள் குறிப்பு மூலம் விபரமான படவரைபுகளைத் தயாரித்தல்/ பரிசீலித்தல் : நில அளவை, மற்றும் (contour line maps) மூலம் குறுக்கு முகமாக, நெடுக்கு வெட்டுமுக வரைபடங்களைத் தயாரித்தல் / பரீட்சித்தல், நீர்ப்பாசனத் திட்டங்களிலுள்ள காணித் துணக்கள் பற்றிய வரைபடங்கள், காணிகளைக் கையகப்படுதும் பட வரைபுகள் பராமரித்தல் செயற்படுத்தல் மற்றும் தயாரித்தல்/ பரிசீலித்தல்<br>2) அளவீட்டுக் கணிப்பு வலை பகுப்பாய்வு/ கணிய விலைபற்றுச் சீட்டுத் (BOQ)<br>3) வேலை மதிப்பீடு பரிசீலனை செய்தல் - வேலை மதிப்பீட்டுக்கிணங்க பெறுகைகளை செயற்படுத்துவதற்கு உரிய படிவங்கள், அட்டவணையைத் தயாரித்தல்/ பரீட்சித்தல் வேலைக்காக கொடுப்பனவு செய்வதற்கு உரிய அளவைப் புத்தகங்கள், கொடுபபனவு பற்றுச்சீட்டு, இறுதிக் கொடுப்பனவு அறிக்கை மற்றும் வரைபடங்கள் என்பவற்றைப் பரிசீலனைச் செய்தல்<br>4) நீர்ப்பாசனத் திட்டங்களுக்குரிய தொழில்நுட்ப செயற்பாடு மற்றும் முறையான தரவுகள் பற்றிய அட்டவணையைப் பராமரித்தல் :முன்னனேற்ற அறிக்கை/ குறிப்பு தயாரித்தல்/ பரிசீலனை செய்தல்<br>5) வரைபுகள், திட்ட வரைபுகள் மற்றும் ஏனைய படவரைபு ஆவணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றை பாதுகாத்தலும் பராமரித்தலும்<br>நிறைவேற்று/முகாமைத்துவ அதிகாரிகளால் வழங்கப்படும் ஏனைய படவரைஞருக் கான கடமைகள் |
| 2. | துளையிடல் உதவியாளர்கள் | • பெரிய மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணத்திற்காக தரையின் பலம் தரை கீழ் நீர்க் கசிவு ஆகியவற்றைப் பரிசீலித்தல்<br>• பாரிய நிர்மாணத்திற்கான அத்திவவாரத்திற்காக பல்வேறு விதமான ஆழமான மட்டங்களிலிருந்து பாறைகள் மற்றும் மண் படிமங்களின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல்<br>• பாறைப் படலங்களில் ஏற்படும் கசிவுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் வலுவூட்டுதல்.<br>• நிறைவடைந்துள்ள நிர்மாணங்களில் உள்ள கசிவுகளை சீமெந்து மற்றும் இரசாயன பொருட்களை செலுத்தி கொங்ரீட் படலங்களை இடுவதன் மூலம் பலப்படுத்தல்.<br>• மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான அறிக்கையினை முன்வைத்தல்<br>மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்காகத் தேவைப்படும் துளையிடல் இயந்திரங்கள், நீர பம்பி மற்றும் ஏனைய உபகரணங்களையும் அவைக்குரிய டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரைங்களையும் செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் |
| 3. | ஆராய்ச்சி உதவியாளர்கள் | 1. தற்போது இடம்பெறும் மற்றும் எதிர் காலத்தில் செயற்படுத்த எதிர்பார்க்கப் படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் சாத்திய வள .ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் மண் மற்றும் நீர் மாதிரிகளில் பௌதீக மற்றும் இரசாயன குணவியல்புகளைப் பகுப்பாய்வு செய்தல்.<br>2. கரைசல் மற்றும் அதற்குரிய கலவை என்பவற்றை முறையாக தயாரித்தல் நாளாந்த பகுப்பாய்வு விடயங்களில் பயன்படுத்தப்படும் நவீன நுண்ணிய இலத்திரனவியல் மற்றும் இயந்திர உபகரணங்களை முறையாக பாவித்தல், பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளை சீரமைத்தல். |

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வழங்கப்படும் செயற்பாடுகள்* |
|---|---|---|
| 4. | சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர்) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்தல், அத்துறையில் பொறியியல் மூலப்பொருளுக்காக தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கையில் (மண் மற்றும் கொங்ரீட் மூலப்பொருட்களின் குணவியல்புகள் மற்றும் அதன் பலம் பற்றிய ஆய்வில்) ஈடுபடுதல் மற்றும் அத்தரத்தினை சான்றுப்படுத்தல்.<br><br>அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல். |
| 5. | மண் பட வரைவியலாளர் | • மண் பரிசீலனை மற்றும் மண் பட வரைபினை ஒன்றிணைத்தலும் தொகுத்தலும்<br>• கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க தேசப்படங்களை வரைதலும் வர்ண மிடுதலும்<br>• நகல் மண் பட வரைபு (Draft Soil Map) மற்றும் இறுதி மண் பட வரைபு (Final Soil Map) என்பவற்றைத் தயாரித்தல்<br>• Aerial photograph இனை உபயோகித்து காணிகளைத் தரப்படுத்தல், அப்பிரதேசத்தின் மண் பட வரைபு, கணக்கிடுதல் மற்றும் வர்ணமிடுதலும் தயாரித்தலும். அத்தோடு பொறியியல் அளவையியல் குறிப்பு: உரு பெரிதாக்கி வரைதல், சிறிதாக்கி வரைதல், பல்வேறு வித மண் மாதிரிகளுக்கிணங்க புவியியல் சார் திட்டப்படங்களை வரைதல் மற்றும் வழங்கப்பட்ட அறிக்கைக்கிணங்க வரைபடம் (graph) வரைதல்.<br>• கணினியூடாக மென் பொருளை (Soft wear) ஐ உபயோகித்து மண் பட வரைபினை தயாரித்தல். |
| 6. | நீரியல் உதவியாளர்கள் | இலங்கையில் நாடு பூராகவும் உள்ள நீர் நதிப்படுகை மற்றும் நீர்த்தேக்கத்தை அண்டிய பிரதேசங்களை இணைத்து அடிப்படை நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகள், விஞ்ஞான ரீதியிலான செயற்பாட்டினை உபயோகித்து நீரின் விஞ்ஞான பூர்வமான அவசியத்த்pற்காக தரவுகளை பகுப்பாய்வு செய்தல், கணனியை உபயோகித்து பகுப்பாய்வு செய்தல், நாளாந்த, மாதாந்த, வருடாந்த மற்றும் நீண்ட காலத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பராமரித்தல், பொது மக்களுக்கு மற்றும் உரிய நிறுவனங்களுக்காக இத் தகவல்களைத் தயாரித்தல்.<br><br>• சேகரிக்கப்பட்ட நீரியல் மற்றும் காலநிலை தரவுகளை முறையாக பாதுகாத்தல், தரத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட தரவு வங்கி (னுயவய டீயமெ) முறையை தொடர்ந்து பேணுதல்.<br>• நதிகளில் வெள்ள மட்டம் உயர்வதை நிர்ணயிப்பதற்குத் தேவையான தரவுகளைப் பெற்று கணனி மயப்படுத்தல் மற்றும் புதிய கணித மாதிரிகளை உபயோகித்து வெள்ளத்திற்கு உட்படக் கூடிய பிரதேசங்களை ஆய்வு செய்தல்.<br>• வெளிக்கள பரிசீலனையூடாக வெள்ளப்பாதிப்பு மட்டம் மற்றும் இப்பாதிப்புகளுக்கு உட்படும் பிரதேசங்களை அளவீடு செய்தல்.<br>• இப்பிரதான ஆறுகளில் அவ்வாறான வெள்ளம் ஏற்படக்கூடிய அல்லது அதற்கு அண்மிக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அத்தரவுகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளல், அதற்கிணங்க எச்சரிக்கை விடுத்தல். |

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வழங்கப்படும் செயற்பாடுகள்* |
|---|---|---|
| 7. | நீரியல் வெளிக்கள உதவியாளர்கள் | நீரியல் பிரிவினூடாக தெரிவு செய்யப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்காக நீரியல் வெளிக்கள அளவீட்டுப் பிரிவுகளை நடாத்திச் செல்லல் மற்றும் அவசியப்படும் கால நிலைத் தரவுகள், மழை வீழ்ச்சி, நதிகளில் பாய்ந்தோடும் நீர் மட்டம் மற்றும் அண்மையிலுள்ள குளங்களின் நீர் கொள்ளளவில் மாற்றம் ஆகியன பற்றிய தரவுகளைச் சேகரித்தல்.<br>• அவ்வாறு பெற்றுக்கொண்ட அனைத்து நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகளைப் பரீட்சித்து அட்டவணைப்படுத்துவதற்காக மாத இறுதியில் பிரதான காரியாலயத்திற்கு ஒப்படைத்தல்.<br>• நதிகளிலும் கிளை நதிகளிலும் அத்தகைய நீர் மட்டம் காணப்படும் போது வெளியுற்றப்படும் நீரின் கொள்ளளவை அளவீடு செய்தல்.<br>வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அல்லது அதற்கு அண்மிய சந்தர்ப்பத்தில் அதற்காக எச்சரிக்கை விடுப்பதற்கு அவசியப்படும் வெளிக்கள தரவுகளை நாளாந்தம் பிரதான காரியாலயத்திற்கு தெரிவித்தல், பிரதான வெள்ள நிலையின் போது அந்நேரத்திலிருந்து வெள்ள மட்டம் வேறுபடுவதைக் குறித்தல். |
| 8. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களின் பொறுத்தப்பாடு பற்றி வழங்கப்படும் நிர்மாணங்களுக்கு இணங்க பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் பரிசீலனைக் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு தரத்தினை உறுதிப்படுத்தல், அத்துறையில் பொறியியல் மூலப்பொருளுக்காக தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு (மண் மற்றும் கொங்ரீட் பொருட்களின் தன்மை மற்றும் பலம் பற்றிய) சேவையின் அவசியத்தின் அடிப்படையில் ஈடுபடுதல்.<br>அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல் மற்றும் தரச்சான்றிதழ் வழங்குதழ். |
| 9. | மண் வள ஆய்வாளர் | 1. தற்போது இடம் பெற்று வரும் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் மண் ஆய்வானது காணிப் பாவனை நடவடிக்கைகளுக்கு அவசியப்படும் வெளிக்களத் தரவுகள் மற்றும் ஏனைய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சர்வதேச தரத்திற்கு இணங்க ஒவ்வொரு வகைகளையும் தரப்படுத்தல்.<br>2. மண் அமைப்பு முறைக் காரணி: காலநிலை, பௌதீக தோற்றம் மற்றும் பூகோளவியல்) என்பவற்றைக் கவனத்திற்கொண்டு அத்தகைய மண் வகுதிகள் அல்லது தரத்தின் அமைவு என்பவற்றைத் தீர்மானித்தல்.<br>3. சர்வதேச தரத்திற்கு இணங்க விபரங்களடங்கிய குறிப்பினைத் தயாரிப்பதற்காக அவசியப்படும் வகையில் மண் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், அத்தகைய மண் மாதிரிகளைப் பகுப்பாய்வுக்காக ஆய்வு கூடத்தில் கையளித்தல், அந்த பகுப்பாய்வுத்தரவு மற்றும் வெளிக்கள பகுப்பாய்வு தரவுகளை அடிப்படையாக வைத்து இறுதி மண் தரவுகளில் சரியானதை உறதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் அதற்கேற்ப soil Index என்பவற்றைத் தயாரித்தல்.<br>4. உரிய பிரதேசத்தில் வான் நிழற்பட (Aerial photograph) உபயோகித்து வான் நிழற்பட ஆய்வினை மேறகொள்ளல்.<br>5. தரவுகள் அவசியப்படும் தீவிரத்தன்மைக்கு இணங்க மண் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளிக்களதரவுகளைப் பெற்றக்கொள்ளல் மற்றும் மண்ணின். இணங்க மண்ணின் வகைகளை இனங்காணுதல்.<br>6. வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகளுக்கிணங்க (Draft Soil Map) தயாரிப்பதோடு Pentograph இயந்திரத்தினாடாக தேவையான அளவில் தயாரித்தல்<br>7. வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகள் மற்றும் இணயத்தை உபயோகித்து காணி உபயோக வரைபடத்தைத் தயாரித்தல்.<br>8. G.P.S (Global Position System) உபயோகித்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்<br>9. மண்ணில் நீர் கடத்தும் திறன் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்<br>10. வெளிக்களத்தில் வெளிக்கள ஊழியர்கள், காவலாளிகள் மற்றும் சாரதிகள் போன்றோரின் நிர்வாக நடவடிக்கைகளை (மேற்பார்வை) செய்தல் மற்றும் அவர்களின் நிதி விடயங்களை நேரடியாக மேற்கொள்ளல். |

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வழங்கப்படும் செயற்பாடுகள்* |
|---|---|---|
| 10. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு) | நீர்வலுப்பிரிவு பொறியியலாளர்களின் நடவடிக்கைகளுக்கு உதவுதல், நீர்வலுப் பிரிவுக்கு உரிய நிர்மாண வேலைகளில் அனைத்து துறைகளிலும் காணப்படும் உபகரணங்கள், மூலப்பொருட்கள், தொழிலாளர் பரிபாலனம், நீர்வலு மாதிரி செயற்பாடு, கட்டிடம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் பரிபாலனம், நீர்வலுப்பிரிவுக்குரிய நிர்மாண வேலைக்கான மதிப்பீடு என்பவற்றைத் தயாரித்தல், திணைக்களத்திற்குரிய அனைத்து இயந்திரவியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை திருத்துதல் சம்பந்தமாக அவ்வுபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய தர அறிக்கையினைத் தயாரித்தல். |
| 11. | இயந்திரவியல் மேற்பார்வையாளர் | சிற்றூழியர்களை நிர்வகிக்கும் போது மற்றும் வாகனங்கள், இயந்திரங்கள் ஆகியனவற்றுக்கான பற்றுச் சீட்டுக்களைத் தயாரிக்கும் போது இயந்திரவியல் பொருளியலாளருக்கு உதவுதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் வேலையை ஆரம்பித்தல்.களஞ்சியப் பொறுப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் பழுதுபார்த்தலுக்காக கொண்டுவரப்படும் விடயங்களை பொறுப்பேற்றல்பழுதுபார்த்தலுக்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்கள், ஆயுதங்கள் மற்றும் மூலப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல், களஞ்சியசாலைப் புத்தகத்தைப் பரிபாலித்தல், மதிப்பீட்டு நடவடிக்கையின் போது இயந்திரவியல் பொறியியலாளருக்கு உதவுதல், பழுதுபார்க்கப்பட்ட பின்னர் முறையாக அவற்றைக் கையளித்தல் மற்றும் உடைந்த உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை மீள களஞ்சிய சாலைக்கு ஒப்படைத்தல், செய்யப்பட்ட பழுதுபார்த்தல்களை லொக் புத்தகத்தில் பதிதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் இணைந்து பற்றுச் சீட்டுக்கள் தயாரித்தல், பாவிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள், எரிபொருள், உராய்வு எண்ணெய் மற்றும் ஏனைய விடயங்களுக்காக மூலப்பொருள் அறிக்கையினைத் தயாரித்தல்.<br><br>பழுதுபார்த்தலுக்காக இயந்திரவியல் தளத்திற்கு கொண்டுவரப்படும் இயந்திரங்கள், வாகனங்கள் களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து இயந்திரவியல் தளத்திலிருந்து பொறுப்பேற்று பழுதுபார்த்தல் முடிவடைந்தவுடன் மீண்டும் களஞ்சியப் பொறுப்பாளருக்குக் கையளித்தல். |

2.0 **ஆட்சேர்க்கும் முறை :**

2.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமைகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு எதிர் பார்க்கப்படும் தொகைக்குச் சமனான விண்ணப்பதாரர்களை சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதி யுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2.2 சாதாரண நேர்முகப் பரீட்சையானது விண்ணப்பதாரர்களின் உடல் ரீதியான தகுதியையும் மற்றும் சான்றுப்பத்திரங்கள் பரிசீலித்துப்பார்க்கப்படுவதோடு அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2.3 நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் சம்மதம் கிடைக்கப்பெற்ற பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது இணையவழி மூலமாகவோ பெறுபேறுகள் விநியோகிக்கப்படும்.

3.0 **சம்பளம் :**

பயிற்சியளிக்கும் தரம் - அரச நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 10/2025 (1) இன் உப பிரிவு VI இற்கிணங்க மாதாந்த கொடுப்பனவுப் படி ஒன்று வழங்கப்படும்.

III ஆம் தரம் - பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் உப பிரிவு II இற்கிணங்க பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 52,250 – 10 x 800 – 11 x 1190 – 10 x 1320 -10 x 1350 – ரூ. 100,040.00 (MN 3 – 2025) ஆகும்.

4.0 **சேவைத் தொகுதி - மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழிநுட்பம்**

4.1 தரம் - III ஆம் தரம்

II ஆம் தரம்

I ஆம் தரம்

4.2 பதவியின் தன்மை – இந்த நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. உரிய ஓய்வூதிய திட்டம் பற்றி அரசாங்கத்தால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

5.0 **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

5.1. பயிற்சியளித்தல் திட்டத்திற்கு உள்ளெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய பயிற்சிக் காலத்திற்குள் வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் மாத்திரமே சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.

5.2. பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு 06 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு தனது பயிற்சிக்காலத்தை நீடித்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் பின்னர் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

5.3. III ஆம் தரத்தின் நியமனமானது 03 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும். III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடத்தினுள் முதலாவது தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து பதவியின் சேவையானது முடிவுறுத்தப்படுவதற்கு உட்படல் வேண்டும்.

5.4. பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இற்கிணங்க மற்றும் அதனோடு இணைந்த சுற்றறிக்கைகளுக்கிணங்க உரிய மட்டத்தில் மொழி பற்றிய உரிய திறனைப் பெறுதல் வேண்டும்.

5.5. அரச சேவை ஆணைக்குழுவின் சேவைத்திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைகளுக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

5.6. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தீவின் எந்த பிரதேசத்திலும் உள்ள நீர்ப்பாசனத் துறைக்கு உரிய வேலைத்தளங்களில் சேவையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

6.0 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்தினத்திற்கு வயது 18 இற்குக் குறையாமலும் 30 இற்கு அதிகமாகாமலும் இருக்க வேண்டும்.

(அதற்கிணங்க 2008.08.25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.08.25 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக்கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமையுடையவராவர்.)

7.0 **தேவையான தகைமைகள் :**

7.1 **கல்வித் தகைமைகள் :**

7.1.1 கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ் /ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம்; மற்றும் வேறு ஏதாவது ஒரு பாடத்தில்; திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

7.1.2 **பட வரைஞர், துளையிடல் உதவியாளர்கள், சிவில் பொறியியல் மூலப் பொருள் ஆய்வாளர் மண் பட வரைவியலாளர், நீரியல் உதவியாளர்கள், நீரியல் வெளிக்கள உதவியாளரகள், ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்), ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு), இயந்திரவியல் மேற்பார்வையாளர்களுக்காக**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் பிரயோகக் கணிதம் / தூய கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞான பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் (03) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

7.1.3 **ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) மண் வள ஆய்வாளர் பதவிகளுக்காக**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் இரசாயனவியல், பௌதீக விஞ்ஞான பாடம் உட்பட ஏதாவது ஒரு விஞ்ஞான அல்லது கணித பாடத்துடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

7.2 **தொழில்சார் தகைமைகள் :**

பட வரைஞர் பதவி மற்றும் இயந்திரவியல் மேற்பார்வையாளர் பதவிக்காக மேலே 7.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்படும் தொழில்சார் தகைமைகளும் இருத்தல் வேண்டும்.

**பட வரைஞர்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் படவரைஞர் பற்றிய ஒரு வருட முழுநேர பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**இயந்திரவியல் மேற்பார்வையாளர்**

I. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி கல்லூரி மூலம் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா.

அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா.

அல்லது

III. கல்வி உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் உயர் டிப்ளோமா.

அல்லது

IV. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அல்லது

V. இலங்கைப் பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் 1 வது பகுதியை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VI. தொழிற்துறைக்குரிய தேசிய தொழில்தகைமை (NVQ) 06 ஆந் மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனஙகளினால் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதோடு மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்பச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்

7.3. **தேகாரோக்கிய தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவைப்புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7.4. **ஏனைய தகைமைகள்**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

III. ஏதேனும் ஒரு மதத்திற்குரிய மதப் போதகர் எவரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைப் பெற்றவர்கள் அல்ல.

IV. சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய அனைத்துத் தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

8.0 **பரீட்சையின் செயற்திட்டம்**

பரீட்சையானது இரு பாடங்களைக்கொண்ட எழுத்து மூலப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படுவதோடு விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *வினாப்பத்திரம் / பாடப்பரப்பு* | *காலம்* | *புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு (01) மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | மூன்று (03)மணித்தியாலம் | 100 | 40 |

8.1 **பரீட்சைக்கான பாடப்பரப்பு**

1. **நுண்ணறிவுப் பரீட்சை(சகல பதவிகளுக்கும் பொதுவானது)**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான மற்றும் தீர்மானித்தல் ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை |

2. **பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை**
   - **பட வரைஞர் பதவிக்காக**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | பட வரைதலின் மூலத் தத்துவத்தைப் பாவித்து கொடுக்கப் படும் கட்டமைப்பிற்கிணங்க பொருளொன்றின் அல்லது ஒரு பகுதியின் குறுக்குமட்ட முன் அல்லது பின் பக்க தோற்றத்தினை வரைதல். |

   - **சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர் / துளையிடல் உதவியாளர் / ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்)/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு) / மண் பட வரைவியலாளர் பதவிகளுக்காக**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | அட்சர கணிதம் (Algibra), கேத்திர கணிதம், திரிகோண கணிதம், திரவம், திரவத்தின் பௌதீக நிலை, திரவத்தின் அழுத்த சமநிலை (hydrostatics) அளவீடு, தேசப்படங்களை வாசித்தல் மற்றும் விஞ்ஞான ரீதியான கணக்கீடு என்பவற்றின் அறிவினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும். |

- **மண் வள ஆய்வாளர்கள் / ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) பதவிகளுக்காக**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | பகுதி I (பௌதீகவியல்)<br>a) ஒளியியல்<br>b) வெப்பம்<br>c) இயந்திரவியல்<br>d) மின்சாரம் மற்றும் காந்த சக்தி<br><br>பகுதி II (இரசாயனவியல்)<br>a) இயற்கை(சேதன) இரசாயனவியல்<br>b) (Organic Chemistry)<br>c) அளவு மற்றும் தரம் பற்றிய பகுப்பாய்வு<br>d) செயற்கை இரசாயனவியல் (Inorganic Chemistry)<br>e) பொது இரசாயனவியல் |

- **நீரியல் வெளிக்ககள உதவியாளர்கள் / நீரியல் உதவியாளர்கள் பதவிகளுக்காக**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | (இணைந்த) கேத்திர கணிதம் (geometry), இயக்கவிதிகள் (geometry), புள்ளி விபரவியல், திருகோண கணிதம், திரவத்தின் அமுத்த சமநிலை, (hydrostatics), இயந்திர வியல், ஒளியியல் (optics), வெப்பம், மின்சாரம் மற்றும் இலத்திரனவியல் ஆகிய பாடங்கள் பற்றி விண்ணப்பதாரரின் அறிவை பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும் |

- **இயந்திரவியல் மேற்பார்வையாளர் பதவிக்காக**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | வரைதல் மூலத் தத்துவத்தை உபயோகித்து கொடுக் கப்படும் உருவத்திற்கமைய இயந்திரத்தின் அல்லது ஒரு பகுதியின் குறுக்கு வெட்டு முகத்தின் முன் அல்லது பின் புற தோற்றத்தை வரைதல் மற்றும் பௌதீக விஞ்ஞானம், இயந்திரவியல் விஞ்ஞானம் மற்றும் பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் பற்றி விண்ணப்பதாரரின் அறிவை பரீட்சிப்பதற்காக விணாப்பத்திரம் தயாரிக்கப்படும். |

9.0 **விண்ணப்பிக்கும் முறை** :

9.1 இணையவழி (Online) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பப்படும் மென்பிரதி மற்றும் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாக/ பொறுப்பேற்கப்படவில்லை என தொகுதியினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (E- Mail) ஊடாக அறியத்தரப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரம் (Instructions) இனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒரு திருத்தம் செல்லுபடியாகும் ஒரு திருத்தமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது முழுமைப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிப்படும்.

9.2 விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவது இலங்கை தொழில்நுட்ப சேவையின் மேலே குறிப் பிடப்பட்டுள்ள எந்த பதவி என்பதை விண்ணப்பப் படிவத்தில் குறித்த இடத்தில் (✓) என்ற அடையாளத்தின் மூலம் தெளிவாக அடையாள மிடுவது கட்டாயமானதாகும். யாரேனும் ஒரு விண்ணப்பதாரர் பல பதவிகளுக்காக விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக இணையவழி (Online) மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி உயர்ந்தபட்சம் மூன்று(03) பதவிகளுக்கே விண்ணப்பிக்க முடியும்.

9.3 விண்ணப்பதாரி பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, பரீட்சை தினத்தில் மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவ்வாறு ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையாகும். ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளாத அனுமதி அட்டையைக் கொண்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம், சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இணையவழி ஊடாக மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம்அனுப்பப்பட்டவுடன்இலங்கைபரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றின் மூலம் / விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ் செய்தியொன்றின் மூலம் அறிவித்தல் வழங்கப்படும். தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறாத பரீட்சார்த்தியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் அமைப்புப் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நேர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரி நிற்கும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியினால் தம்வசம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

9.5. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதல், பரீட்சைக்கு தோற்றுவதற்காக அல்லது பதவியில் அமர்த்துவதற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

9.6. அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் செய்ய வேண்டியதாக ஏதேனும் இருந்தால் நேரங்காலத்தோடு பரீட்சைகள் திணைக் களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தத்திற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப் படும்.

9.7. சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கியொழுகுதல் வேண்டும்

10. **பரீட்சைக் கட்டணம் :**

❖ பரீட்சைக் கட்டணம் ரூபா 1200/- ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழியின் ஊடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண செலுத்துகை முறைக்கு ஏற்ப மாத்திரமே செலுத்தப்படுவதல் வேண்டும்

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)

ii. இணையவழி செலுத்துகை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்படி முறைமை மூலம் கட்டணம் செலுத்தப்படும் விதம் குறித்த அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அல்லது அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத் திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல்

வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப் பிட்ட கட்டண செலுத்துகை முறை மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்படும் தொகை எவ்விதக் காரணமும் இன்றி மீள செலுத்தவோ அல்லது மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளளம் :**

10.1 பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்ட பத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனு மொரு ஆவணம் மாத்திரம் செல்லுபடியாகும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே, பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் அணியப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடியுமான வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண் ணப்பதாரி பரீட்சை மண்பத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

12. **போலியான தகவல்களுக்கான தண்டனை**

12.1 எவரேனும் ஒரு பரீட்சார்திக்கு தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத் திலும் அவரது பரீட்சார்த்தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட் சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ் வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

13. **பொதுவான விடயங்கள்:**

13.1 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

13.2 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படின் அது பற்றியும் இந்த வெற்றிடங்களை நிரப்புவது பற்றியும் அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும்.

13.3 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப்பதங் களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலம் சரியானது எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

கலாநிதி (எந்திரி). கித்சிறி வெலிகேபொலகே,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2026, யூலை.

07-380

---

## ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களாகப் பதிவு செய்வதற்கான மூன்றாவது தேர்வு - 2026

### 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் பிரிவு 30(3) இன் கீழான அறிவித்தல்

குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 30 (1) இன் கீழ் ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பித்தவர்களில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்காக, அதே சட்டத்தின் பிரிவு 30(2) இன் கீழ் நடத்தப்படவிருக்கும் மூன்றாவது எழுத்துத் தேர்வு, 2026, ஓகத்து 03, 04 மற்றும 05 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை, ஸ்ரீ தம்மாராம இல. 144, ஹைலெவல் வீதி, நுகேகொடை எனும் இடத்தில் நடைபெறும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்தேர்வானது முன்னர் 2026, யூலை 27, 28 மற்றும் 30 ஆகிய திகதிகளில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக இது 2026, ஓகத்து 03, 04 மற்றும் 05 ஆகிய திகதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

2026, யூலை 27, 28 மற்றும் 30 ஆகிய திகதிகளுக்காக முன்னர் வழங்கப்பட்ட தேர்வு அனுமதி அட்டைகள் இனி செல்லுபடியாகாது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

திருத்தப்பட்ட தேர்வுத் திகதிகளைக் குறிப்பிடும் புதிய அனுமதி அட்டைகளை விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பதிவாளர் (பதில்),
ஹோமியோபதி மருத்துவ சபை.

ஹோமியோபதி மருத்துவ சபை,
இல. 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசர,
ராகம.

07-428

---

**ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களாகப் பதிவு செய்வதற்கான மூன்றாவது தேர்வு - 2026**

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் பிரிவு 30(3) இன் கீழான அறிவித்தல்

குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 30 (1) இன் கீழ் ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பித்தவர்களுள் தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களுக்காக, 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 30(2) ஆம் பிரிவின் கீழ் நடாத்துவதறகுத் தீர்மானிக்கப்பட்டுள்ள மூன்றாவது எழுத்துப் பரீட்சையானது, 2026, யூலை 27, 28 மற்றும் 30 ஆகிய திகதிகளில் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரை நுகேகொடை ஹைலெவல் வீதி, இலக்கம் 144 இல் அமைந்துள்ள ஸ்ரீ தம்மா ராமயவில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பதிவாளர் (பதில்),
ஹோமியோபதி மருத்துவ சபை.

ஹோமியோபதி மருத்துவ சபை,
இல. 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசர,
ராகம.

07-379

---

**திருத்தம்**

**நீதி அமைச்சும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சும்**

**சிறைச்சாலைகள் திணைக்களம்**

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2026 ஆம் ஆண்டிற்கான (துறைசார்) சாரதி மற்றும் அம்புலன்ஸ் சாரதி பதவிகளுக்கான (முதன்மை - திறன்சார் சேவைப் பிரிவு தரம் III) திறந்த போட்டித் தேர்வு - அறிவிப்பு திருத்தம்

2026.07.17 ஆந் திகதிய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்கண்ட போட்டித் தேர்வுக்கான விண்ணப்ப அழைப்பில் இடம்பெற்ற பிரிவு 07 பின்வருமாறு திருத்தப்படுகின்றது என்பதை அன்புடன் அறிவிக்கப்படுகிறது.

**7. தேர்வுக் கட்டணம்**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ கணக்கு இலக்கமான இலங்கை வங்கியின் பொரளை சிறப்பு தரக் கிளையின் 7041491 ஆம் கணக்கு இலக்கத்திற்கு, நாட்டில் அமையப்பெற்றுள்ள ஏதேனுமோர் இலங்கை வங்கிக் கிளை ஒன்றில் பணத்தைச் செலுத்தி, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை அதன் ஒரு விளிம்பை மாத்திரம் விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல்.

ஆர். பிரசாத் ஹேமந்த குமார,
சிறைச்சாலைகள் ஆணையாளர்
நாயகம் (கையொப்பம்).

2026.07.21

07-379

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*